கழக வெளியீடு - ௩௨.

உ

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணத்து

நீர்வேலிச்

சங்கரபண்டிதரவர்கள்

இயற்றிய

சைவப்பிரகாசனம்

ஷை பண்டிதரவர்களின் பேரனார்

சி. பண்டித நடராஜரவர்கள் விரும்பியவண்ணம்

வெளியிடப்பட்டது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை
குரோதன ஆடி மீ

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,

:: *Tinnevelly and Madras* ::

July 1925

Printed by C. Munisawmy Mudaliar & Sons., Madras.

உ-6

பதிப்புரை

சைவப்பிரகாசனமென்னும் இந்நூல் யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதரென்னும் வித்துவசிகாமணியாராற் செய்யப்பட்டு நாற்பத்தைந்து யாண்டுகட்கு முன்னர் (விஷு ௵ ஆவணி ௴ சைவ வுலகிற்கு) வெளியிடப்பட்டது. இது சைவ ஞான சாத்திரங்களை அறிதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தருக்க அறிவையும் அதனை உபயோகிக்கும் முறையையும் நன்கு விளக்குவது.

பண்டிதரவர்கள் இதனை வெளியிட்ட காலந்தொட்டு இதுவே நமது இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பல்லோராலும் தருக்கவறிவு கருதிப் பயிலப்பட்டு வருகின்றது. இஃதொன்றே இதன் பெருமையை விளக்குவதற்குப் போதியதாகும்.

இந்நூற் பிரதிகள் இப்பொழுது கிடைத்தல் அரிதாயிருத்தலின், இதனை யாங்கள் வெளியிடுகின்றோம். இதனை வெளியிடுதற்கு மிக மகிழ்ச்சியுடன் அநுமதி கொடுத்த ௸ பண்டிதரவர்களின் பேரனாராகிய திருவாளர். சி. பண்டித நடராஜரவர்களுக்கும், எங்கள் விருப்பத்திற் கிணங்கி இந்நூலில் இன்றியமையாத குறிப்புக்க ளெழுதி யுதவிபுரிந்த திருநெல்வேலி, இந்துகலாசாலைத் தமிழாசிரியர், திருவாளர். வி. சிதம்பரராமலிங்கம்பிள்ளை யவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரிமையாகின்றது.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

சாதாரண பீடிகை

உ

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

சைவப்பிரகாசனம்

தேவாரம்

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

முன்னுரை

சகல லோகைக நாயகராகிய சிவபெருமானாற் சம்ஸ்கிருத பாஷையிலே அருளிச்செய்யப்பட்ட வேத சிவாகமங்கள் தனித்தனியே கருமகாண்டம், ஞான காண்டம் என்னும் இருவகை யுடையனவாம். அவற்றுட் கருமகாண்டங்களிலே கிரியாக்கிரமங்களும், ஞானகாண்டங்களிலே இலக்கணப் பிரமாணங்களோடு பதிமுதலிய பதார்த்தங்களும் மிக விரிவாக நிரூபிக்கப்பட்டன.

அவற்றுள், ஞானகாண்டங்களில் நிரூபிக்கப்பட்ட பதிமுதலிய பதார்த்தங்கள், சிவபெருமானுடைய திருவருளைப்பெற்ற மகான்களாலே தமிழ்ப்

பாஷையிற் செய்யப்பட்ட சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலிய உண்மை நூல்களிலே சுருக்கியும், விரித்தும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

அங்ஙனமாயினும், அந்நூல்கள் பத்தியரூபங் களாயிருத்தலினலே, பூரண வியுற்பத்திமான்களுக் கன்றி மற்றையோருக்கு உபயோகப்படா; பூரண வியுற்பத்திமான்களுக்கும் பிணிமுதலிய ஏதுக்களாலே விவேகங் கிளராத காலங்களில் உபயோகப்படாதன வாகும்.

இங்ஙனமாக, இவ்வியாழ்ப்பாணத்துச் சுன்னை நகரின்கண்ணே வேளாண் மரபிலே திருவவதாரஞ் செய்து, சம்ஸ்கிருதத் திராவிட வியுற்பன்னராகி, ஸ்ரீலஸ்ரீ வேதாரணியத்துச் சுவாமிநாத தேசிகர் அவர் களிடத்திலே கிரமமாகச் சித்தாந்தோபதேசம் பெற் றுக்கொண்டவர்களும், இந் நீர்வேலி நகரின்கண்ணே நெடுங்காலம் இருந்து இல்லறத்தை ஒழுங்காக நடத் தினவர்களும், சம்ஸ்கிருதத்திலே பாலபாடம், இலக் கணச்சுருக்கம் முதலியவைகளையும், சித்தாந்த சாரா வலியின் ஞானபாதத்துக்கு ஒரு லகுடீகையையும், சிவஞானபோதத்துக்குத் தமிழிற் சிற்றுரையும், பிராசாத சட்சுலோகிக்குத் தமிழ் வியாக்கியைபையும், அகநிர்ண யத்துக்குத் தமிழ் வியாக்கியையையும், தமிழிலே சிவ பூசையந்தாதிக்கு ஒரு விருத்தியுரையையும், கிறிஸ்து மதகண்டனம் முதலிய கத்திய ரூபமாகிய சில நூல் களையும், அனுட்டானவிதி சிராத்தவிதிமுதலியவைகளை யும் உலோகோபகாரத்தின் பொருட்டுச் செய்தருளி

னவர்களும், சிவ. சங்கரபண்டிதர் என்னுந் திருநாம முடையவர்களும் ஆகிய தமியேனுடைய பிதாமகர் அவர்கள், அந்த ஞானகாண்டங்களின் பொருள்களை மிகச்சுருக்கி விளக்குவதும், சுத்தியரூபமும் ஆகிய இச் சைவப்பிரகாசனம் என்னும் நூலை அதிகாரிகளாகிய எல்லாருக்கும் உபயோகமாகும்பொருட்டுச் செய்தருளினார்கள்.

இதற்கு அதிகாரிகளாவார் இயன்றவளவு இலக்கண இலக்கிய ஆராய்ச்சி செய்தவர்களாய்ச் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய் உள்ள சைவசமயிகள்.

இதனைக் கற்றுணர்ந்தவர்கள், சிவஞானபோதம் முதலிய திவ்விய நூல்களை ஓதியுணர்தற்கு அதிகாரிகளாவர்; ஆதலின் முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெறுதலே இதின் பயன்.

சைவசமயிகளே! நீங்கள் இதனைக் கிரமமாகக் கற்றுணர்ந்து உறுதிப்பயனைப் பெறும்பொருட்டு முயலக் கடவீர்கள்.

இவ்வரிய நூலை அனைவருங் கற்றுணர்ந்து பயன் பெறும்பொருட்டு இதனை அச்சிடுதற்கு முன்வந்த திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு நான் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்

நீர்வேலி, சி. பண்டித நடராஜன்.

திருச்சிற்றம்பலம்

சிறப்புக்கவிகள்

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதினத்து
மகாவித்துவான் யாழ்ப்பாணத்து வடகோவை

சபாபதி நாவலரவர்கள்

சொல்லியது

நற்சுருதி யிற்பரந்த ஞானமெலாந் தான்சுருக்கி
பொற்புறவே சொற்கொள் பொருள்விளக்கிச்-சொற்ற
சைவப்ர காசனநூல் சாற்றுபுகழ்ச் சங்கரனும் [னனுல்
சைவப்ர காசபண்டி தன்.

நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள்
மருகரும் மாணுக்கருமாகிய

ச. பொன்னம்பல பிள்ளையவர்கள்

சொல்லியது

சைவசித் தாந்தத் துயர்பொருளைச் சாதிக்குஞ்
சைவப் பிரகா சனநூலைச்—சைவநிலை
பாரிற் குலவப் படைத்திட்டான் சங்கரனும்
நேரி னிலைப்பண் டிதன்.

சுன்னுகம்

அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள்

சொல்லியது

முன்னூல் விரிபொருள் யாவுஞ் சுருக்கி முறைவிளக்கி
நன்னூ லிதுவெனச் சைவப்ர காசன நன்குசெய்தார்
தென்னூ லொடுவட நூற்கட லுண்டு செகம்புகழப்
பன்னூ லியற்றிய நீர்வேலிச் சங்கர பண்டிதரே.

சைவ உதயபானு பத்திராதிபராகிய

ஊரெழு

சு. சரவணமுத்துப் பிள்ளையவர்கள்

சொல்லியது

கற்றோர் புகழ்சைவ சித்தாந்தப் பாலின் கடல்கடைந்து
மற்றோர் நினைக்கருஞ் சைவப்ர காசன மாவமிழ்தை
நற்றூ ரணிச்சைவ நற்புல வோர்க்கு நயந்தளித்தான்
வற்றா வறிவுடைச் சங்கர பண்டித மாதவனே.

பண்டிதரவர்களுடைய

மாணாக்கராகிய

ஆவரங்கால்

சி. குமாரவேற் செட்டியாரவர்கள்

சொல்லியது

பரவியபல் சமயநூல் பலவுங் கற்றுப்
பரசமய கோளரியாய்ப் பழிப்பில் சீர்த்தி
விரவுசிவா கமமுழுதுந் தேர்ந்த நாதி
மேவுதிரி பொருளுண்மை விளங்கக் கண்டு

கருதிடுசை வப்பிரகா சனமே யன்றிக்
காசினியிற் பலநூல்க ளுரைகள் செய்தான்
மருவெனக்குஞ் சிலநூல்க ளுணர்த்தி நீர்வை
மன்னியசங் கரதேவ வள்ள ளுனே.

உ

திருச்சிற்றம்பலம்

சைவப்பிரகாசனம்[1]

சாதாரண பீடிகை[2]

க. இலக்கணம்

இலக்கண இயல்பு

இலக்கணப் பிரமாணங்களால் வஸ்து சித்தியாம் என்பது நியாய சாஸ்திர சித்தம்.[3]

இலக்கணம்-குறிப்பது, குறி, அடையாளம். பிரமாணம் - அளவை. சித்தி-முடிபு, பெறுதி. சித்தம்-முடிக்கப்பட்டது, பெறப்பட்டது.

---

1. பிரகாசனம்-விளக்கம்.

2. சாதாரண பீடிகை-பொது விஷயங்களைக் கூறும் பகுதி.

3. இப்பொருளை ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மாபாடியத்தில் நான்காஞ் சூத்திரவுரையில் 'பிரமாணம் இலக்கணம் இரண்டானும் பொருளுண்மை பெறற்பாற்று' என அருளிச் செய்வதறிக.

அவற்றுள், இலக்கணமாவது சிறப்பியல்பு; அது பொருளைப் பிறவற்றின் வேறுபடுத்துக் குறிப்பது.[1] இலக்கணத்தாற் குறிக்கப்படுவது இலக்கியமாம்.

ஆ என்னும் இலக்கியத்திற்குத் தாடிமுதலியன[2]வுடைமை இலக்கணம்; அக்கினிக்குச் சூடுடைமை இலக்கணம்.

இலக்கணத்தைக் கெடுக்குங் குற்றங்கள் அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என மூன்றும்.[3]

அவ்வியாத்தி - வியாபித்தலின்மை. அதிவியாத்தி - மேல்வியாபித்தல். அசம்பவம்-இருத்தலின்மை.

அவற்றுள், அவ்வியாத்தியாவது, இலக்கணம் இலக்கியத்தின் ஏகதேசத்தில்[4] இருத்தலின்மை; எங்ஙனம்,—ஆவிற்குக் கபில நிறமுடைமை.

அதிவியாத்தியாவது, இலக்கணம் இலக்கியமல்லாததன்கண்ணும் இருத்தல்; எங்ஙனம்,—ஆவிற்குக் கோடுடைமை.

---

1. இதனைத் தருக்க சங்கிரகவுரை (2-வது பகுதி) யிற்கண்டு தெளிக.

2. முதலியன என்றதனுற் கோடு முதலியன கொள்ளப்படும். நியாயப் பிரகாசத்தில் முதற் பரிச்சேதத்துக் காண்க.

3. இம்மூன்றும் தருக்க சங்கிரகவுரை (2-வது பகுதி)யிற் கூறப்படுதல் காண்க.

4. ஏகதேசம் - ஒரு புடை.

அசம்பவமாவது, இலக்கணம் இலக்கிய முழுதி னும் இருத்தலின்மை ; எங்ஙனம்,—ஆவிற்கு ஒற் றைக்குளம்புடைமை.

இம் முக்குற்றங்களும் நீங்கிய இயல்பே இலக்க ணம் ; இலக்கிய முழுதிலும் வியாபித்து, இலக்கிய மல்லாததின் வியாபியாத தன்மையே இலக்கணம் என்பது முடிபு.

இலக்கண விபாகம்[1]

இவ்விலக்கணம் சுவரூபமும், தடஸ்தமும், அதத்துவியாவிருத்தமும் என்னும் மூவகையுடைத்து.

> சுவரூபம் - தன்னியல்பு. தடஸ்தம் - அயலிடத்திவி ருப்பது. அதத்துவியாவிருத்தம் - அது வல்லாத திலிருந்து திரும்பியது.

அவற்றுள், சுவரூபமாவது, இலக்கியப் பொரு ளிலே இயற்கையாக இருக்கும் இலக்கணம் ; எங்ங னம்,—ஆன்மாவிற்கு அறிவு தொழிலுடைமை.

தடஸ்தமாவது, பிறிதோர் பொருளின் சார்பு பற்றி இலக்கியப் பொருளில் இருக்கும் இலக்கணம் ; எங்ஙனம்,—ஆன்மாவிற்குச் சிற்றறிவுடைமை, அல் லது சரீரப் பிரேரகத்தன்மை.[2]

---

1. விபாகம் - பிரிவு.
2. பிரேரகத்தன்மை - செலுத்துதற்றன்மை.

அதத்துவியாவிருத்தமாவது, மற்றைப் பொருளிலிருந்து நீங்கி இலக்கியத்திலிருக்கும் இலக்கணம்; எங்ஙனம்,—ஆன்மாவிற்குச் சரீர முதலியவற்றின் வேறுந்தன்மை. அதத்துவியாவிருத்தம் தடஸ்தத்துள் அடங்குதலுங் தகும்.

இங்ஙனங்கூறிய இலக்கணத்திற்குப் பயன் பொருள்களை வேறுபடுத்தி வழங்குதலாம்.

உ. பிரமாணம்

பிரமாண இயல்பு

பிரமாணமாவது, பிரமிதியினது கருவியாம். பிரமிதியாவது, பிரமாதா பிரமேயத்தை ஐயந்திரிபின்றி உள்ளபடி யறிதல். அதுவே மெய்யறிவு.

> பிரமாதா-அளப்பவன். பிரமாணம்-அளவைக்கருவி. பிரமிதி - அளத்தல்; பிரமையுமது. பிரமேயம் - அளக்கப்படுவது.

ஐயமாவது,[1] ஒருபொருளை மாறுபட்ட பலபொருளாக உணர்தல்; எங்ஙனம்,—இவ்வுருக் குற்றியோ புருடனோ என்றல்.

---

1. நிருவிகற்பமாய் அறிந்த பொருளை இது யாதோவென ஒன்றிற்றுணிவு பிறவாது ஆராயும் ஆன்மாவினது ஞானசத்தி. 'கண்ட பொருளை யிரட்டுறவே கருதலையம்' என்பது சிவஞான சித்தி அளவை ௩.

திரிபாவது,[1] ஒருபொருளை மற்றொரு பொருளாக உணர்தல்; எங்ஙனம்,—இப்பியை வெள்ளியென்றல். ஐயமுந் திரிபும் பொய்யறிவாம். மெய்யறிவின் வாசனையாற்றோன்று முணர்வு மெய்ந்நினைவு; பொய்யறிவின் வாசனையாற்றோன்று முணர்வு பொய்ந்நினைவு.

உள்ளபடியறிதலாவது, அறியப்படும் பொருளில் இருந்த பிரகாரமுடையதாக அறிதல்.

இனிக் கருவியாவது,[2] காரணங்களுட் சிறந்ததாகிய காரணம்.

கருவி- கரணம்.

காரணமாவது,[3] பிறிதொன்றிற்கு ஆகவின்றி நியதமாய்க் காரியத்துக்கு முன்னிற்றலுடையது.

காரியமாவது,[4] முன்னில்லாததாகிப் பின்னுள்ளதாவது.

---

1. நிருவிகற்பமாயறிந்த பொருளை அதனோடொப்புமையுடைய வேறு பொருளாக மயங்கி நிச்சயிக்கும் ஆன்மாவினது ஞானசத்தி. 'திரியவே கொண்டறிரிவாம்' என்பது சிவஞான சித்தி அளவை ௩

2. 'கரணமாவது சிறப்புக்காரணம்' என்பது தருக்க சங்கிரகம் (௩௧-வது பகுதி)

3. 'காரணம் காரியத்துக்கு நியதமாய் முன்னிற்பது' என்பது தருக்க சங்கிரகம் (௩௰-வது பகுதி)

4. 'காரியம் முன்னின்மைக்கு எதிர்மறை' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி ௩௧.)

அந்தக்காரணம் முதலும், துணையும், நிமித்தமும் என மூவகைத்து.[1]

முதல்- உபாதானம், சமவாயி. துணை - சககாரி.

காரியத்தோடு சமவாயமுடைய காரணம் முதற் காரணம்.

சமவாயம் - ஒற்றுமை, இயைபு.

காரியந் தோன்றுதற்கு உபகாரகமாய் நிற்குங் காரணந் துணைக்காரணம்.

உபகாரகம்- உதவுவது, உதவி.

தன்வசமாய் நின்று, காரணங்களைப் பிரேரித்துக் காரியத்தைத் தோன்றுவிக்குங் காரணம் நிமித்தகாரணம்.

வசம் - தலைமை, இச்சை. பிரேரித்தல் - ஏவுதல், செலுத்தல்.

எங்ஙனம்,—குடமாகிய காரியத்துக்கு மண் முதற்காரணம்; திரிகை முதலியன துணைக்காரணம்; குயவன் நிமித்த காரணம்.

---

1. 'காரியகாரணங்கண் முதறுணை நிமித்தங் கண்டாம்' என்பது சிவஞான சித்தி முதற்சூத்திரம் திருவிருத்தம் ௧அ.

2. 'பாரின்மண் டிரிகை பண்ணு மவன்முத றுணை நிமித்தம்' என்பது சிவஞான சித்தி முதற்சூத்திரம் திருவிருத்தம் ௧அ.

பிரமாண இயல்பு

இம்மூன்று காரணங்களுள், எவ்வாற்றானுஞ் சிறந்ததாவதே கருவியாம்.[1]

கருவியானது, அவாந்தரவியாபாரமும் பலனும் உடையது; எங்ஙனம்,—தறித்தற்கருவியாகிய குடாரத்துக்கு மரத்தோடுளதாய கூட்டமே அவாந்தர வியாபாரம்; தறித்தலே பலன்.

அவாந்தர வியாபாரம்- இடைத்தொழில்.

பிரமாதாவினது சிற்சத்தியே பிரமிதித்தொழிலினது கருவியாதலின், அதுவே பிரமாணம்.[2]

சிற்சத்தி- அறிவாற்றல்,

சிற்சத்தியாகிய பிரமாணத்துக்கும், பிரமேயப்பொருட்கு முளதாகிய ஞாபக ஞாப்பியத்தன்மைச் சம்பந்தமே அவாந்தர வியாபாரம்: அச்சம்பந்தத்தாற்றோன்றும் பிரமேயவறிவே பிரமிதியாம்: அதுவே பலன்.

ஞாபகம் - அறிவிப்பது. ஞாப்பியம் - அறிவிக்கப்படுவது.

---

1. 'இங்ஙனங்கூறிய மூவகைக் காரணத்துள் யாது சிறந்தகாரணம் அதுவே கரணம்' என்பது தருக்கசங்கிரகம் (சஉ-வது பகுதி)

2. ஆன்மசிற்சத்தியே பிரமாணமென்பது சிவஞான சித்தியளவையிலும், சிவசமவாதவுரைமறுப்பில் 'ஈண்டு பக்கப் போலி' யென்னுந் திருவிருத்தவுரை மறுப்பிலும் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் அருளிச் செய்திருத்தலாற்றெளிக.

தடையில்லாத சிற்சத்தியானது, பிறபொருளி னுபகாரத்தை வேண்டாது தன்னியற்கையால் விளங்கிப், பிரமேபங்களெல்லாவற்றையும் நிருவிகற்பமாக அளந்தறியும் ; அவ்வறிவு அனுபூதி யெனப்படும்.

அனுபூதி - காட்சி, எதிருற்றுணர்தல்.

அவ்வனுபூதி சுவானுபூதியும், பரானுபூதியும் என இரண்டாம்.

சுவானுபூதி - தற்காட்சி. பரானுபூதி - பிறகாட்சி.

பிரமாணவிபாகம்

பெத்தான்மாவாகிய பிரமாதாவினது சிற்சத்தி பாசத்தாற் றடுக்கப்பட்டிருத்தலாற், பிறபொருளின் உபகாரத்தை வேண்டித், தத்துவங்களால் விளங்கி, இந்திரியம், இலிங்கம், சத்தம் என்னும் மூன்றினோடு கூடுதலால், முறையே பிரத்தியக்ஷம், அனுமானம் ஆகமம் என்னும் பெயருடைய மூவகைப் பிரமாண மாகித் தன்னெல்லைக்கியன்ற பிரமேயங்களை நிருவிகற்ப சவிகற்பமாக அளந்தறியும்.[1]

---

1. இவ்வுண்மையை 'மருவிய பொறியிலொன்று மா பூதமைந்திலொன்றுங், கருவிகணன்கு நீங்காக்கலாதிகளைந் துங்கூடி, யொரு புலனுகரும்' என்னுஞ் சிவப்பிரகாசத்திரு விருத்தத்தாலறிக. நிருவிகற்பசவிகற்பங்களின் இலக்கணங் களைப் 'பெயர்சாதி குணமே கன்மம் பொருளெனவைந், தண்டவ் விகற்பவுணர்வனுக்குப் பொருளினுண்மை மாத் திரத்தின், விண்டலில்லா வறிவாகும் விகற்ப மில்லாக் காட்

அச்சிற்சத்திக்கு உபகாரமாகிய இந்திரியம், இலிங்கம், சத்தம் என்பவையும் உபசாரத்தால் முறையே பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் என்னும் பெயர் பெறும்.

ஆகமப்பிரமாணம், சத்தப்பிரமாணம் என்பன பரியாயமாம். இந்திரியம் - பொறி. இலிங்கம் - குறி. சத்தம் - சொல், உரை. பிரத்தியக்ஷம் - காண்டல். அனுமானம் - கருதல். ஆகமம் - உரை, வரவு. உபசாரம் - சார்ச்சி வழக்கம்.

இப்பிரமாணங்களாற் றோன்றும் பிரமிதிகள் முறையே பிரத்தியக்ஷம், அனுமிதி, சாத்தம் எனப் பெயர் பெறும்.

பிரத்தியக்ஷம் - காட்சியுணர்வு. அனுமிதி - கருத்துணர்வு. சாத்தம் - உரையுணர்வு.

இம்மூன்றும் முறையே அனுபூதி, யுத்தி, சுருதி எனவும்படும்.

இவற்றிற்குக் காட்சி, கருத்து, கேள்வி என்பன பிரதிபதம்.

பிரத்தியக்ஷம்

இனிப்பிரமாண மூன்றனுட், பிரத்தியக்ஷப் பிரமாணமாவது, பிரத்தியக்ஷப் பிரமிதியின் கருவியாம்;

சியே'என்னுஞ் சிவஞான சித்தியளவை யியற்றிரு விருத்தத்திற்குச் சிவஞான சுவாமிகளருளிச்செய்த வுரையாலறிக. மேற்பிரமிதி கூறுமிடத்துங் கண்டு கொள்க.

சிற்சத்தியோடு கூடிய இந்திரியமே பிரத்தியக்ஷப் பிரமிதியின் கருவியாதலிற் பிரத்தியக்ஷப் பிரமாணமெனப்படும். பிரத்தியக்ஷப் பிரமிதியாவது, இந்திரிய விடய சம்பந்தத்தாற்[1] றோன்றும் அறிவு. ஈண்டு இந்திரியங் கருவி; இந்திரிய விடய சம்பந்தம் வியாபாரம்; பிரத்தியக்ஷப் பிரமிதி பலன்.

இந்திரியங்களாவன,—மனம், செவி, தோல், கண், மூக்கு, நாக்கு என்னும் ஆறுமாம். விடயங்களாவன திரவியங்களும், அவற்றின் குணங்களும், கருமங்களும், அவற்றின் சாதியும், விசேடமும், சமவாயமும், அவற்றி னின்மையுமாம்.[2]

இந்திரியம் தனக்கு யோக்கியமான விடயத்தையே கவரும்.

யோக்கியம்- தக்கது, எற்றது.

அகவிந்திரியமாகிய மனத்துக்கு உணர்வு, விருப்பு, முயற்சி, இன்பம், துன்பம், வெறுப்பு என்னும் அகப்பொருள்கள் நேரே யோக்கியமாம்.

ஏனைப்புறப்பொருள்கள் அந்த அந்த இந்திரியத் துவாரத்தால் யோக்கியமாம்.

1, இந்திரியத்திற்கும் பொருளுக்கும் உளதாகிய தொடர்பு.

2. இப்பொருள்கள் எழும் 'திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவமெனப் பதார்த்தங்கள் எழு' எனத் தருக்க சங்கிரகத்துக் கூறப்பட்டன. (பகுதி க.)

புறவிந்திரியங்களுட் கண்ணுந் தோலுமல்லாதன வற்றிற்குத் திரவியம் யோக்கியமாகா.

ஒளித்துணையோடு கூடிய கண்ணுக்குப் பருமை யுந் தோற்றிய உருவமுமுடைய திரவியங்களும், யோக்கியத்[1] திரவியங்களிலுள்ளனவாகிய உருவம், எண், அளவு, வேற்றுமை, சம்யோகம்,[2] விபாகம்,[3] முன்மை, பின்மை, சிநேகம், நெகிழ்ச்சி, வேகம் என்னுங் குணங் களும், யோக்கியத் திரவியத்தினியைந்த கருமமும், யோக்கியப் பொருள்களையடைந்த திரவியத்தன்மை உருவத்தன்மை முதலிய சாதியும், யோக்கியப்பொருள் களின் சமவாயமும்[4] யோக்கியமாம். பரமாணுப்பரு மையுடையதன்று; ஆன்மா முதலியன உருவமுடை யன அல்ல; பிசாச சரீரமுதலியன தோற்றிய உருவ முடையன அல்ல; ஆதலின் அவை கண்ணுக்கு யோக் கியமல்ல.

தோலுக்குப் பருமையுந் தோற்றிய பரிசமு முடைய திரவியங்களும், உருவத்தின்வேறாய்க் கண் ணுக்கு யோக்கியமாகி யோக்கியத் திரவியத்திலிருக் குங் குணங்களும், யோக்கியத்திரவியத்திலுள்ளபரிச மும், யோக்கியத்திரவியத்தின் கருமமும், யோக்கியப் பொருளின் சாதியுஞ், சமவாயமும் யோக்கியமாம். பரமாணுப்பரியதன்று; ஒளி தோற்றிய பரிசமுடைய

1. யோக்கியம் - தகுதி
2. சம்யோகம் - சேர்க்கை
3. விபாகம் - பிரிவு
4. சமவாயம் - ஒற்றுமை

தன்று; வாயுவினளவு கண்ணுக்கு போக்கியமன்று; ஒளியினளவு போக்கியப்பொருளின் இருப்பதன்று; ஆதலின் அவைபோக்கியமல்ல.

மூக்குக்குப் பரியதன்கணுள்ள தோற்றியகந்தமும், அதன் சாதியும், அவ்விரண்டின் சமவாயமும் போக்கியமாம். பரமாணுவின் கந்தம் பரியதிலுள்ளதன்று; வச்சிரமணி[1] முதலியவற்றின் கந்தம் தோற்றியதன்று; ஆகலின் அவை போக்கியமல்ல.

நாக்குக்குப் பரியதிலுள்ள தோற்றிய இரசமும், அதன்சாதியும், அவ்விரண்டின் சமவாயமும் போக்கியமாம். பரமாணுரசம் பரியதிலுள்ளதன்று; வச்சிரமணி முதலியவற்றின் இரசம் தோற்றியதன்று; ஆதலின் அவை போக்கியமல்ல.

செவிக்குச் சத்தமும், அதன்சாதியும், அவ்விரண்டின் சமவாயமும் போக்கியம்.

இந்திரியவிடயங்களின் சம்பந்தம்[2] சம்யோகமும் சம்யுத்த சமவாயமும், சம்யுத்த சமவேத சமவாயமும், விசேடண விசேடியத் தன்மையும் என நான்காம்.[3]

---

1. வச்சிரமணி - வைரம்.

2. 'சம்பந்தமெனினும் இயைபெனினும் யாப்பெனினும் கிழமையெனினும் ஒக்கும்' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி உஉ.)

3. இங்கே கூறப்பட்ட நான்கனோடு சமவாயமும் சமவேத சமவாயமுமாகிய இரண்டுங் கூட்டித் தருக்க சங்கிரகத்து அறுவகைப் படுமென்று கூறப்பட்டது (பகுதி சச.)

இவற்றிற்கு முறையே புணர்ச்சி, புணர்ந்ததினி யையு, புணர்ந்ததினியையந்ததினியையு, அடைமுத வாதல் என்பன பிரதிபதம்.

திரவியங்கள் சம்யோகத்தானும், குணமுங் கரும முந் திரவியத்தின் சாதியுஞ் சம்யுத்தசமவாயத்தா னும், குணகருமங்களின் சாதி சம்யுத்த சமவேத சம வாயத்தானும், சமவாயமும் இன்மையும் விசேடண விசேடியத்தன்மைச் சம்பந்தத்தானுங் கவரப்படும்.

எங்ஙனம்,—கண்ணாற் குடத்தைக் காணுங்காற், சம்யோகசம்பந்தம். குடத்தினது கருமை முதலிய உருவத்தைக் காணுங்காற், சம்யுத்த சமவாயம்; கண்ணோடு சம்யுத்தமான குடத்தில் உருவஞ் சமவா யித்தலால். குடத்தினுருவத்தினுள்ள உருவத்தன்மை யாகிய சாதியைக்காணுங்கால், சம்யுத்தசமவேத சம வாயம்; கண்ணோடு சம்யுத்தமான குடத்தில் உருவஞ் சமவேதம், உருவத்தில் உருவத்தன்மை சமவாயித்த லால். நூல்களில் ஆடைச்சமவாயத்தைக் காணுங்கால், விசேடண விசேடியத்தன்மைச் சம்பந்தம்; கண்ணோடு சம்யுத்தமான நூல் விசேடணம், நூலில் ஆடைச்சம வாயம் விசேடியம் ஆதலால். பூமியிற் குடமின்மை யைக் காணுங்காலும், அதுவே சம்பந்தமாம்.

இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் அறி வாகிய பிரத்தியக்ஷப் பிரமிதி நிருவிகற்பமுஞ், சவிகற் பமுமென இருவிதமாம்.

. நிருவிகற்பம்-விகற்பமில்லாதது. சவிகற்பம்—விகற் பமுடையது. விகற்பம்-வேறுபாடு, பேதம்.

நிருவிகற்பப் பிரமிதியாவது, விசேடணத்தோடு கூடுதலின்றிப், பொருண்மை மாத்திரத்திற்றோய்ந்து, இஃதொன்று எனத்தோன்றுமறிவு.

சவிகற்பப்பிரமிதியாவது, நாம, சாதி, குண, கருமத், திரவியங்க ளாகிய விசேடணங்களோடு கூடி "இவன் தேவதத்தன், இவன் பிராமணன், இவன் கரியன், இவன் ஓதுவான், இவன் பொன்னன்" என்றிவ்வாறு தோன்றுமறிவு.

விசேடணம்-வேறுபடுத்துவது, அடை. விசேடியம்-வேறுபடுத்தப்படுவது, முதல்.

இப்பிரத்தியக்ஷப் பிரமிதியின் கருவியாகிய இந்திரியம் புணர்ந்த சிற்சத்தியே, பிரத்தியக்ஷப் பிரமாணம்.

பிரத்தியக்ஷப் போலி

இனிப் பித்தம், படலம்,[1] தூரம், இருள் முதலிய குற்றங்களோடு கூடிய இந்திரியம், பிரத்தியக்ஷப் போலி[2] எனப்படும்.

அனுமானம்

அனுமானப் பிரமாணமாவது, அனுமிதியின் கருவியாம்:[1] சிற்சத்தியோடு கூடிய இலிங்கம் அனுமிதி

---

1. பித்தம், படலமென்பன கண்ணி லுண்டாகும் நோய்கள்.

2. பிரத்தியக்ஷப்போலி-பிரத்தியக்ஷ ஆபாச மென்றுங் கூறப்படும்.

யின் கருவி ஆதலின், அனுமானப் பிரமாணம் எனப்படும்.

இலிங்கம், குறி, சாதனம், ஏது என்பன பரியாயம்.
அனுமிதி-கருதலறிவு.

அனுமிதியாவது, இலிங்கத்தின் பராமரிசத்தாற் றோன்றும் அறிவு.[2] ஈண்டு இலிங்கவுணர்வு கருவி; பராமரிசமே வியாபாரம்; அனுமிதி பலம்.

பராமரிசம் - ஆராய்ச்சி.

இலிங்கமாவது, வியாத்தி வலியால் மறைந்த பொருளை உணர்த்துவது.

வியாப்பிய மாவதே இலிங்கமெனினு மொக்கும். எங்ஙனம்,—புகை தீக்கு இலிங்கம்.

வியாத்தி-வியாபித்தல், செறிதல், உடனிகழ்ச்சி.

வியாத்தியாவது, சாதனத்துக்குச் சாத்தியத் தோடுளதாகிய இயற்கைச் சம்பந்தம்.[3]

---

1. 'அனுமானமாவது அனுமிதிக்குக் கரணம்' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி சரு.)

2. 'அனுமிதி ஆராய்ச்சியாற் றோன்றும் ஞானம்' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி சரு.)

3. 'வியாத்தி யாண்டுப்புகை ஆண்டுத்தீ யென நியதமான உடனிகழ்ச்சி' யென்பது தருக்க சங்கிரகம் (பகுதி சரு.)

வியாப்பிய வியாபகங்களினியற்கைச் சம்பந்தமே வியாத்தி எனினுமொக்கும்.

எங்ஙனம்,—யாண்டுப்புகை ஆண்டுத்தீ எனப் புகைக்குத் தீயோடுள்ள சம்பந்தம்.

சாதனம்-முடிப்பது. சாத்தியம்-முடிக்கப்படுவது. வியாப்பியம்-வியாபிக்கப்படுவது, குறைந்திருப்பது. வியாபகம்—வியாபிப்பது, மிகுந்திருப்பது.

புகை வியாப்பியம்; தீ வியாபகம்.

இலிங்கத்தின் பராமரிசமாவது, வியாப்பியமாகிய இலிங்கம் பக்ஷத்தில் இருக்கின்றதென்று உணர்தல்:[1] எங்ஙனம்,—தீயால் வியாபிக்கப்படுவதாகிய புகை மலையிலே உண்டு என்னுமுணர்ச்சி. அப்பராமரிசமே வியாபாரம்.

பக்ஷம் - பக்கம், சார், சாத்தியஸ்தானம்.

இலிங்க பராமரிசத்தாற் றோன்றும் அறிவு பக்ஷத்திற் சாத்தியம் இருக்கின்றது என்னுமறிவாம்:[2] எங்ஙனம்,—மலையிற் றீயுண்டென்னுமறிவு. அதுவே பலமாகிய அனுமிதியாம். அது சவிகற்பமே.

---

1. 'ஆராய்ச்சி வியாத்தி யடுத்த பக்கதருமத்தன்மை ஞானம்' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி ௪௫.)

2. 'அவ்வாராய்ச்சியாற் றோன்றியது இம்மலை தீயுடைத்தென்னுமுணர்வு' என்பது தருக்க சங்கிரகம் (பகுதி ௪௫)

இவ்வனுமானம் சுவார்த்தமும், பரார்த்தமும் என இரண்டாம்.[1]

சுவார்த்தம் - தன்பொருட்டு. பரார்த்தம் - பிறர் பொருட்டு.

ஒருவன் கானே அடுக்களை முதலியவற்றிற் சிறந்த பிரத்தியக்ஷத்தாற் புகைதீக்களின் வியாத்தியைக் கவர்ந்து, மலையின் அண்மையிற் சென்று, மலையிற்றீயின் ஐயங்கொண்டு, அம்மலைமேற் புகையைக் கண்டுழி: "யாண்டுப்புகை ஆண்டுத்தீ" என்னும் வியாத்தியை நினைப்பன்; அதன்பின் மலை தீயால் வியாபிக்கப்பட்ட புகையுடையது என்னும் உணர்வாகிய இலிங்கபராமரிசந் தோன்றும்; அதுவே சுவார்த்தானுமானம்: அதனால் இம்மலை தீயுடைத்து என்னுஞ் சாத்தியசித்தியுணர்வாகிய அனுமிதி தோன்றும்; அது சுவார்த்தானுமிதி எனப்படும்.

தான் புகையாற் றீயை அனுமிதித்துணர்ந்து, பிறரை உணர்த்துதற்குப் பிரயோகிக்கும் அனுமான வாக்கியமே பரார்த்தானுமானம். வாக்கியம் இலிங்க

---

1. இங்கே கூறப்பட்ட இருவகை யனுமானங்களதியல்பையும் 'பக்க மூன்றின் மூன்றேதுவுடைய பொருளைப் பார்த்துணரத், தக்க ஞானந் தன்பொருட்டாம் பிறர்தம் பொருட்டா மனுமானந், தொக்க விவற்றூற் பிறர்தெளியச் சொல்லலாகும்' என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலும், தருக்கசங்கிரகத்து சக, சஎ, சஅ பகுதிகளாலும் அறிக.

பராமரிசம் அன்றுதலின், வாக்கியம் அனுமிதிக்கு நேரே கருவியன்றும் ஆயினும், அனுமிதிக்குக் கருவியாகிய இலிங்க பராமரிசத்தைப் பபக்குஞ் சாத்த உணர்வைப் பிறப்பிக்குஞ் சின்ன[1] மாதலின் அவ் வாக்கியம் உபசாரத்தால் அனுமானம் என்று சொல்லப்படும்.

அனுமான வாக்கியமானது பிரதிஞ்ஞை, ஏது, உதாரணம் என்னும் மூன்று அங்கமுடையதாம்.[2]

பிரதிஞ்ஞை - மேற்கோள், சம்மதி. உதாகரணம்- எடுத்துக்காட்டு.

அவற்றுட் பிரதிஞ்ஞையாவது, பக்கத்தைச் சாத்திய முடையதாக உணர்த்துவது; ஏதாவது, மூன்றுமுருபேனும்,[3] ஐந்தாமுருபேனும்[4] ஈறாக நின்று இலிங்கத்தை உணர்த்துவது. உதாகரணமாவது; வியாத்தியோடு கூடிய திருட்டாந்தத்தை உணர்த்துவது.

திருட்டாந்தம் - காணப்பட்ட முடிபுடையது.

---

1. சின்னம் - அடையாளம்.

2. இங்கே கூறப்பட்ட மூன்று அங்கங்களோடு உபநயம், நிகமனமென்னு மிரண்டுங்கூட்டி உறுப்பைந்தென்று தருக்கசங்கிரகத்துக் கூறப்பட்டது (பகுதி சகூ.) ‘ இவை, தொகையா குறுப்பைந் தொடுங்கூடச் சொல்லுவாரு முளர் துணிந்தே’ என்பது சிவஞானசித்தி.

3. மூன்றும் வேற்றுமை யுருபு - ஆன்.

4. ஐந்தாம் வேற்றுமையுருபு - இன்

அநுமானவாக்கியம்,—(க) மலை தீயுடைத்து; (உ) புகை யுடைமையால், (ங) யாது புகையுடைத்து அது தீயுடைத்து அடுக்களைபோல என்பதாம். இதனுள் மூன்று அங்கமும் வந்தன; இதனால் உணர்த்தப்பட்ட இலிங்கத்தாற் பிறனுக்கு மலையிற்றீயுண்டு என்னுமுணர்வு உண்டாம்; அது பரார்த்தானுமிதி எனப்படும்.

சுவார்த்தானுமிதி பரார்த்தானுமிதி என்பவையிரண்டிற்குங் கருவியாகிய இலிங்க பராமரிசத்தோடு கூடிய சிற்சத்தியே அனுமானப் பிரமாணம்.[1]

இலிங்கத்தின் வியாத்தி அன்னுவய வியாத்தியும், வியதிரேக வியாத்தியும் என இரண்டு விதமாம்.

> அன்னுவயம் - உடன்பாடு, உண்மை. வியதிரேகம்- மறை, இன்மை, மீட்சி.

அன்னுவயத்தால் ஆகும் வியாத்தியாவது, சாதன சாத்தியங்களின் உண்மையாலாகும் வியாத்தி; சாதனமுள்வழிச் சாத்தியம் உளதாதல் என்றபடி. அது, யாண்டுப்புகை ஆண்டுத்தீ எனவரும்.[2]

---

1. 'தன் பொருட்டனுமிதி பிறர் பொருட்டனுமிதி யென்னுமிவை யிரண்டிற்கும் இலிங்கவாராய்ச்சியே கருவி. அதனால் இலிங்க பராமரிசம் அனுமான மெனப்பட்டது' என்பது தருக்கசங்கிரகம் (பகுதி - ௫௰)

2, 'புகையாலனலுண்டடுக்களைபோ லென்னப் புகறலன்னுவயம்' என்பது சிவஞானசித்தி.

வியதிரேகத்தால் ஆகும் வியாத்தியாவது, சாத்திய சாதனங்களின் இன்மையால் ஆகும்வியாத்தி ; சாத்தியமில்வழிச் சாதனமும் இன்ருதல் என்றபடி ; அது யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையுமில்லை என வரும்.1

அன்னுவய வியாத்தியில் யாது வியாப்பியம், அதனின்மை வியதிரேக வியாத்தியில் வியாபகமாம்; அன்னுவய வியாத்தியில் யாது வியாபகம், அதனின்மை வியதிரேக வியாத்தியில் வியாப்பியமாம்; கொள்ளியிற் புகையின்ருகவுந் தீயிருத்தலாற் புகை வியாப்பியம், தீ வியாபகம்; கொள்ளியிலே தீயின்மை இன்ருகவும் புகையின்மை இருத்தலாற் புகையின்மை வியாபகம், தீயின்மை, வியாப்பியம்.

வியாத்தி ஸ்தானம் பக்ஷஞ், சபக்ஷம், விபக்ஷம் என மூன்ரும்.

சபக்ஷம் - சமபக்ஷம் - விபக்ஷம் - விஷமபக்ஷம்

பக்ஷமாவது, கருத்திஞலே துணியப்படுஞ் சாத்தியத்துக்கு இடம்; சபக்ஷம், காட்சியிஞலே துணியப்பட்ட சாத்தியத்துக்கு இடம்; விபக்ஷம் துணியப்பட்ட சாத்திய இன்மைக்கு இடம்: எங்ஙனம்,—புகை

---

1. 'வகையா மனவிலா விடத்துப் புகையின்ருகு மலரிஞெடு, முகையார் நீரிற் போலென்று மொழிதல் வெதிரேகச்சொல்' என்பது சிவஞானசித்தி.

யுடைமையாகிய ஏதுவில், மலை பக்ஷம், அடுக்களை சபக்ஷம். மடு விபக்ஷம்.[1]

இலிங்கமானது, கூடியும் பிரிந்தும் நிற்கின்ற வியாத்தியால், அன்னுவய வியதிரேகி, கேவலான்னுவயி, கேவல வியதிரேகி என மூவகைத்தாம்.[2]

அவற்றுள், அன்னுவய வியதிரேகி[3] அன்னுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுடையது: எங்ஙனம்;—தீசாத்தியமாகுமிடத்துப் புகையுடைமையாகிய இலிங்கம் அன்னுவய வியதிரேகி; யாண்டுப் புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல என அன்னுவய வியாத்தியும், யாண்டுத்தீயில்லை ஆண்டுப் புகையுமில்லை மடுப்போல என வியதிரேக வியாத்தியும் உடைமையின்.

இங்ஙனமே, (க) சப்தம் அநித்தியம் (உ) செய்யப்பட்ட தாதலின் (ங) யாது செய்யப்பட்டது அது அநித்தியம் குடம்போல, (ங) யாது அநித்தியமன்று

---

1. இங்கே கூறப்பட்ட மூன்று பக்கங்களி னியல்புகளை 'மூன்று பக்கம்' எனத் தொடங்குஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாலும் தருக்கசங்கிரகம் ருசு-வது பகுதியாலும் அறிக.

2. 'இலிங்கம் அன்னுவயவெதிரேகி, கேவலாந்நுவயி கேவலவெதிரேகி யென மூவகைத்து' என்பது தருக்கசங்கிரகம் (பகுதி ருக.)

3. இதனைத் தருக்கசங்கிரகத்து ருஉ-வது பகுதியானும் அறிக.

அது செய்யப்பட்டதன்று கடவுள்போல, ஆன்மாப் போல. என்பதில், செய்யப்பட்ட தாதல் என்னுமி லிங்கம் அன்னுவயவியதிரேகியே, பிறவுமன்ன.

இனிக் கேவலான்னுவயியாவது;[1] அன்னுவயத்தின் மாத்திரம் வியாத்தி யுடையது: எங்ஙனம்,— (க) சட மாகிய உலகம் ஒரு கருத்தாவாற் பிரேரிக்கப்படுகின் றது, (உ) சடமாகிப் பயனுடைத்தொழிலைச் செய்த லால், (ங) யாது சடமாகிப் பயனுடைத் தொழிலைச் செய்கின்றது அது கருத்தாவாற் பிரேரிக்கப்படுகின் றது, தேவதத்தனாற் கடையப்பட்டு வெண்ணெய்யைப் பிறப்பிக்கின்ற தயிர்போல என்பதாம்.

ஈண்டுக் கருத்தாவாற் பிரேரிக்கப்படுதல் சாத்தி யம்; சடமாகிப் பயனுடைத்தொழிலைச் செய்தல் இலிங் கம்; அதுவுங் கேவலான்னுவயி; வியதிரேக வியாத்தி யின்மையின். அங்ஙனமன்றே,— யாது கருத்தாவாற் பிரேரிக்கப்படாதது அது சடமாகிப் பயனுடைத்தொழி லைச் செய்யாதது இதுபோல என வியதிரேக திருட் டாந்தம் இல்லை; எல்லாச் சடப்பொருளும் பயனு டைத் தொழிலைச் செய்வதும், பிரேரிக்கப்படுவதுமா யிருத்தலின்.

இனிக் கேவல வியதிரேகியாவது[2] வியதிரேகத் தின் மாத்திரம் வியாத்தி யுடையது: எங்ஙனம்,—(க)

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து ருங-வது பகுதியா லறிக.

2. இதனைத் தருக்கசங்கிரகத்து ருச-வது பகுதி யாலறிக.

சீவிக்கின்ற சரீரம் ஆன்மாவுடையது (உ) பிராணன், அபானன் முதலியன வுடைமையால் (௩) யாது ஆன்மா வுடையதன்று அது பிராணன் முதலியன வுடையதும் அன்று சகடம்போல.

ஈண்டு ஆன்மாவுடைமை சாத்தியம்; பிராணன் முதலியனவுடைமை இலிங்கம்; அதுவுங் கேவல வியதிரேகி; அன்னுவய வியாத்தியின்மையின், அங்ஙனமன்றே,—யாது பிராணன் முதலியவுடையது அது ஆன்மாவுடையது இதுபோல என் அன்னுவய திருட்டாந்தமில்லை, சீவிக்கின்ற சரீரமெல்லாம் பக்ஷமேயாகலின்.

அன்னுவய வியதிரேகி யேதுப் பக்ஷத்தில் இருக்கை, சபக்ஷத்தில் இருக்கை, விபக்ஷத்தின் நீக்கம் என்னும் மூன்று ரூபங்களோடு கூடியதாம். எங்ஙனம்,— புகையுடைமையாகிய ஏதுப் பக்ஷமாகிய மலையில் இருத்தலும், சபக்ஷமாகிய அடுக்களையில் இருத்தலும், விபக்ஷமாகிய மடுவில் இல்லாது நீங்குதலும் உடைத்தே.

ரூபம்-தன்மை-விதம்.

கேவலான்னுவயி யேதுப் பக்ஷத்திலிருக்கை, சபக்ஷத்திலிருக்கை என்னும் இரண்டு ரூபமுடையதாம். அதற்கு விபக்ஷமின்மையின் விபக்ஷத்தின் நீக்கம் இல்லை.

கேவலவியதிரேகி யேதுப் பக்ஷத்தினிருக்கை, விபக்ஷத்தின் நீக்கம் என்னும் இரண்டு ரூபமுடைய

தாம் அதற்குச் சபக்ஷமின்மையிற் சபக்ஷத்திலிருக்கை இல்லை.

அநுமானப்போலி[1]

இனிப் பக்ஷத்தில் இருக்கையின்மை, சபக்ஷத்தில் இருக்கையின்மை, விபக்ஷத்தின் நீக்கமின்மை என்னுங் குற்றங்களோடு கூடிய அநுமானம் அநுமானப்போலி எனப்படும்.

அநுமானப்போலி எதுப்போலி எத்துவாபாசம் என்பன பரியாயம்.

எதுப்போலியாவது, எதுலக்ஷணமின்றி எதுப் போலத்தோன்றுவது: அது அசித்தம், விருத்தம், அநைகாந்தம் என மூன்றும்.

> அசித்தம்-முடியாதது, முடிக்கப்படாதது. விருத்தம்-முரணியது, மாறுனது. அநைகாந்தம்-ஒருதலையில்லது, பிறழ்வுடையது.

அவற்றுள், அசித்தமாவது, பக்ஷத்தில் இருக்கை யில்லாத எது.

ஈண்டு வியாத்தியோடுகூடிப் பக்ஷத்திலிருப்பதே முடிந்தது; அஃதல்லாததே முடியாதது.

---

1. 'ஈண்டு பக்கப்போலி நான்கேதுப்போலி யொரு மூன்றாய், வேண்டுமெழு மூன்றுகும் விளங் குவமைப்போலி யீரொன்பான், காண்டும்' என்பது சிவஞானசித்தி.

அசித்தம்

அசித்தமானது, பக்ஷாசித்தம், சுவரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தம் என மூன்றும்.[1]

பக்ஷாசித்தம் பக்ஷமின்மையான் முடியாதது: எங்ஙனம்,—ஆகாசத்தாமரை மணமுடைத்து, தாமரையாதலால், குளத்தாமரை போல என்பது.

ஈண்டு மணமுடைமையாகிய சாத்தியத்துக்கு ஆகாசத் தாமரை பக்ஷம்; அதுவே இல்லை.[2]

பக்ஷம், ஆச்சிரயம், சார்பு என்பன பரியாயம்.

சுவரூபாசித்தந் தன்னியல்பின்மையான் முடியாதது; பக்ஷத்திலே தன்னியல்பால் இருத்தலில்லாத ஏது என்றபடி: எங்ஙனம்,—சரீரம் நித்தியம், பிரிக்கப்படாமையால் உயிர்போல என்பது.

ஈண்டுப் பிரிக்கப்படாமை ஏது; அதுவுஞ் சரீரத்தில் இல்லை: சரீரம் பிரிக்கப்படுவதே ஆதலின்.[3]

வியாப்பியத்துவாசித்தம்[4] வியாபிக்கப்படுந் தன்

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து சுஅ-வது பகுதியிலுங் காண்க.

2. இதனைத் தருக்கசங்கிரகத்து சுச-வது பகுதியில் தெளிக.

3, இதனைத் தருக்கசங்கிரகத்து சுரு-வது பகுதியில் தெளிக.

4 இதனைத் தருக்கசங்கிரகத்து சுசு-வது பகுதியில் தெளிக.

மையின்மையான் முடியாதது; வியாத்தியில்லாத ஏது என்றபடி: அது இருவகைப்படும்.

அவற்றுள், முதலாவது சாத்தியத்தோடு உடனிகழ்ச்சிச் சம்பந்தம்[1] இல்லாத ஏது: எங்ஙனம்,—யாது உள்ளது அது கணிகம், எங்ஙனம் முகிற்படலம்,[2] அங்ஙனஞ் சரீரம் முதலியனவும் உள்ளன என்பதாம்; இது பௌத்த அனுமான வாக்கியம். இதன் திரிபுவாக்கியம்:—சரீரம் முதலியன கணிகம், உளவாதலால், யாது உளது அது கணிகம், எங்ஙனம் முகிற்படலம் என்பதாம்.

ஈண்டுச் சரீரம் முதலியன பக்ஷம்; கணிகத்தன்மை சாத்தியம்; உளதாதல் ஏது: இவ்வேதுக் கணிகத்தன்மையோடு சம்பந்தித்தலைக் கவரும் பிரமாணமே இல்லை.

கணிகம்-கணமாத்திரத்தில் இருப்பது. படலம்-கூட்டம்.

இனி இரண்டாவது உபாதியோடு கூடிய சாத்தியத்தோடு சம்பந்தமுடைய ஏது.

உபாதி-செயற்கை, பயப்பது.

தன்குணத்தைத் தன்னிற்போலத் தன்னை அணுகிய பொருளிடத்துச் சார்த்துவதே உபாதி; சாத்தியத்திற் சம வியாத்தியுடையதாய்ச் சாதனத்தில்

---

1. உடனிகழ்ச்சி அவினாபாவமென்றுங் கூறப்படும்.
2. முகிற்படலம்-மேகக்கூட்டம்.
3. பௌத்தன்-புத்தராற் கூறப்பட்ட சமயவாதி.

வியாபியாததே உபாதி என்பதாம்: அஃது எங்ஙனம், —மலை புகை யுடையது, தியுடைமையால், அடுக்களை போல என்பது.

ஈண்டுத் தீயுடைமை சாதனம்; புகையுடைமை சாத்தியம்; ஈரவிறகுத் தீக்கூட்டம் உபாதி: அது புகையோடு தன்னிடத்தில் காரியகாரண சம்பந்தமாகிய வியாத்தியைத் தன்னிடத்திற்போலத் தன்னை அணுகியதாகிச் சாதனம் என்று எண்ணப்பட்ட தீயிடத்திற் சார்த்துகின்றது; அதுதான், யாண்டுப் புகையுண்டு ஆண்டு ஈரவிறகுத் தீக்கூட்டம் உண்டு, யாண்டு ஈரவிறகுத் தீக்கூட்டம் உண்டு ஆண்டுப் புகை உண்டு எனச் சாத்தியத்திற் சம வியாபகமாயும், யாண்டுத் தீ உண்டு ஆண்டு ஈரவிறகுத் தீக்கூட்டம் இன்று, ஒழுகக் காய்ச்சிய இரும்பில் ஈரவிறகின்மையின் என ஏதுவில் வியாபகமாகாமலும் இருத்தலின், உபாதிலக்ஷணம் உடையதாம்; அதுவே புகையைப் பயப்பது; மற்றைத் தீ புகையைப் பயப்பதன்று.

அவ்வுபாதியோடு கூடிய சாத்தியம் புகையுடைமை; அச்சாத்தியத்தோடு சம்பந்தமுடைய ஏதுத் தீயுடைமை; அதுவே உபாதியோடு கூடிய வியாப்பியத்துவாசித்தம்.

இங்ஙனமே வேள்வியில்[1] நிகழுங் கொலை அதன்ம சாதனம், கொலைமையால்,[2] வேள்விப் புறத்துக்

1. வேள்வி-யாகம்.
2. கொலைமை-கொலைத்தன்மை.

கொலைபோல என்பதில், விலக்கப்பட்டமை உபாதி; அது, யாண்டு அதன்மசாதனத்தன்மை ஆண்டு விலக்கப்பட்டமை உண்டு, யாண்டு விலக்கப்பட்டமை ஆண்டு அதன்மசாதனத்தன்மை உண்டு எனச் சாத்திய சம வியாபகமாயும், யாண்டுக் கொலைமை ஆண்டு விலக்கப்பட்டமை இன்று, வேள்விக்கொலை, சத்துருக் கொலை, கள்வர்கொலை முதலிய கொலையின் விலக்கப் பட்டமை இன்மையின் எனச் சாதன அவ்வியாபகமாயும் இருத்தலின். ஆதலின் அதன்மசாதனத்தைப் பயப்பது கொலையன்று; விலக்கப்பட்டமையே.

விருத்தம்.

இனி விருத்தமாவது,[1] சபக்ஷத்திலின்றிப் பக்ஷத்திலும், விபக்ஷத்திலும், இருக்கையுடைய ஏது; சாத்தியத்துக்கு விபரீதமாகிய சாத்தியத்தை முடிக்கும் ஏது என்பதாம்.

அஃது எங்ஙனம்,—சரீரம் நித்தியம், பிரிக்கப் படுவதாதலால், உயிர்போல என்பது: ஈண்டு நித்தியத்தன்மை சாத்தியம்; பிரிக்கப்படுந்தன்மை ஏது: அது சபக்ஷமாகிய உயிர்முதலிய நித்தியப்பொருளில் இருத்தலின்றிப், பக்ஷமாகிய சரீரத்திலும், விபக்ஷமாகிய குடம்முதலிய அநித்தியப் பொருளிலும் இருப்பது. அதுவும் நித்தியத்தன்மைக்கு விபரீத[2] மாகிய

1. இதனைத் தருக்கசங்கிரகத்து சுக-வது பகுதியிற் றெளிக.

2. விபரீதம்-மாறுபாடு

அநித்தியத்தன்மையைச் சாதிப்பது; யாதுபிரிக்கப் படும் அஃது அநித்தியமே ஆதலின். இதுவே விருத் தம்.

இங்ஙனமே ஆன்மாத் தோற்றமுடையன், அழி விலி[1] யாதலால், குடம்போல என்பதில், அழிவிலியா தலாகிய ஏதுத் தோற்றமுடைமைக்கு விபரீதமாகிய தோற்றமின்மையைச் சாதிக்கின்றது: உலகம் முதற் காரணமில்லாதது, காரியமாதலின், இறைவன் போல என்பதில், காரியமாதல் என்னும் ஏது முதற்காரண மின்மைக்கு விபரீதமாகிய முதற்காரணமுடைமை யைச் சாதிக்கின்றது.

அநைகாந்தம்[2]

இனி அநைகாந்தமாவது வியபிசாரம் உடைய ஏது.

வியபிசாரம் - பிறழ்வு, நியமமின்மை.

விபக்ஷத்தின் நீங்கிப் பக்ஷ சபக்ஷங்களின் இரு த்தலாகிய நியமம் இல்லாத ஏது அநைகாந்தம் என் பது: அதுபொதுவுஞ், சிறப்பும் என இருவகைத்து.[3]

---

1. அழிவிலி-அழிவில்லாதவன்.

2. அநைகாந்திகம்-சவ்வியபிசாரமென்றுஞ் சொல்லப் படும்.

3. தருக்கசங்கிரகத்து ௩௭-வது பகுதியில் இவ்வி ரண்டனோடு முடிவு பெறாமை யென்பதொன்றுங் கூட்டிச் சவ்வியபிசார மூவகைத்தெனக் கூறப்பட்டது. அதன் இலக் கணத்தைத் தருக்கசங்கிரகத்து ௬௰-வது பகுதியிற் காண்க.

அவற்றுட் பொதுவனைகாந்தமாவது பக்ஷ சபக்ஷ விபக்ஷங்களின் இருக்கும் ஏது, எங்ஙனம்,—சரீரம் நித்தியம், பொருண்மையால், உயிர்போல என்பது: ஈண்டுப் பொருண்மையாகிய ஏதுச் சரீரத்தினும், நித்தியப்பொருளினும், அநித்தியப்பொருளினும் இருக்கின்றது.

சிறப்பனைகாந்தஞ் சபக்ஷ விபக்ஷங்களில் இன்றிப் பக்ஷமாத்திரத்தில் இருக்கும் ஏது: எங்ஙனம்,—தீ நித்தியம், சுடுடைமையால், உயிர்போல என்பது: ஈண்டுச் சுடுடைமை நித்தியப்பொருளினும், அநித்தியப்பொருளினும் இன்றித் தீமாத்திரத்தில் இருக்கின்றது.

சற்பிரதிபக்ஷம்.[1]

இனி இம்மூன்றோடு சற்பிரதிபக்ஷம், பாதிதம் என்னும் இரண்டுங் கூட்டி, ஏதுப்போலி ஐந்து என்பாரும் உளர்.

சற்பிரதிபக்ஷம் - உள்ளவிரோதியை - உடையது.
பாதிதம் - தடுக்கப்பட்டது.

அவற்றுட் சற்பிரதி பக்ஷமாவது, சாத்தியத்துக்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்குஞ் சமபலமாகிய வேறோர் ஏதுவையுடைய ஏது.

சமபலம்-ஒத்தவலியுடையது.

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து ௬௨-வது பகுதியிலுங் காண்க.

எங்ஙனம்,—மிருகசரீரம் உயிரில்லது, பேசாமையால், கடம்[1] போல: மிருகசரீரம் உயிருடையது, இயங்குதலால், மனுடசரீரம்போல என்பதாம்.

ஈண்டுப் பேசாமையேது ஊமை முதலியனவற்றினும், இயங்குதலேதுச் சகடம்[2] முதலியவற்றினுஞ் சென்று பிறழுதலால், அவை சமபலமாகும்.

பாதிதம்[3]

பாதிதமாவது, சாத்தியத்துக்கு விபரீதமாகிய சாத்தியத்தைச் சாதிக்கும் பிரபலமாகிய வேருேரேதுவாலே தடுக்கப்பட்ட ஏது: எங்ஙனம்,—தீ சூடில்லது, பொருண்மையால், நீர்போல என்பதாம்.

ஈண்டுச் சூடின்மை சாத்தியம், அதற்கு விபரீதமாகிய சூடு பரிசப்பிரத்தியக்ஷத்தான் உணரப்படுதலிற் பொருண்மையேதுப் பாதிதம்; பரிசப்பிரத்தியக்ஷமே அதன் பாதகம்.

பிரபலம்-மிகுவலியுடையது. பாதகம்-தடுப்பது.

இங்ஙனமே மிருகசரீரம் உயிரில்லது, பேசுதன் முதலியன இன்மையால், கடம்போல என்பது; மிருகசரீரம் உயிருடையது, பசித்தல், புசித்தல், வாடல், பூரித்தல், விழித்தல், மூடல், உய்தல், இறத்தல், பிரா

---

1. கடம்-குடம்.
2. சகடம்-வண்டி.
3. இதனைத் தருக்கசங்கிரகத்து ௬௭-வது பகுதியினுங் காண்க.

னன், அபானன், இந்திரியம், மனம், புத்தி, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, முயற்சி முதலியனவுடைமையின், மனுடசரீரம்போல என்னும் பிரபல அனுமானத்தாலே தடுக்கப்பட்டுழிப் பாதிதமாம்.

சற்பிரதி பக்ஷமும்,[1] பாதிதமும்,[2] பிறவும் முன்னுரைத்த அசித்தம்,[3] விருத்தம்,[4] அநைகாந்தம்,[5] என்னும் மூன்றனுள் அடங்கும்.

இந்த ஏதுப்போலிகளாற்[6] பொய்யறிவு தோன்றும்.

---

1. சற்பிரதிபக்ஷம் - மறுதலையுடையதென மொழி பெயர்த்துக் கொள்ளப்படும்.

2. பாதிதம்-மறுப்புடையதென மொழிபெயர்த்துக் கொள்ளப்படும்.

3. அசித்தம்-பேறில்லதென மொழிபெயர்த்துக்கொள்ளப்படும்.

4. விருத்தம்-மாறுகொள்வதென மொழிபெயர்த்துக் கொள்ளப்படும்.

5. அநைகாந்திகம்-பிறழ்வுடையதென மொழிபெயர்த்துக் கொள்ளப்படும்.

6. "ஈண்டுக்கூறும் பக்கப்போலி உவமைப்போலிகளெல்லாம் ஏதுப்போலியு ளடங்குமெனத் தார்க்கிகர் கூறுவர். பக்கவுவமைக ளிலக்கணத்தை நோக்கிக் காணும் வழி அவை பக்கப்போலி உவமைப்போலி யெனப்படுவனவன்றி ஏதுப்போலி யெனப்படாமையறிக"—என்பது சிவஞான சித்தி அளவை ௧௪-வது செய்யுளுக்குச் சிவஞானசுவாமிகளுரைப் பகுதி.

ஆகமம்

ஆகமப் பிரமாணமாவது, வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவி; சிற்சத்தியோடு கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாதலின் ஆகமப் பிரமாணம் எனப்படும்.

ஆகமம்-சாத்திரம், வரவு. சத்தம்-எழுத்து, சொல், வாக்கியம்.

வாக்கியப் பொருளுணர்ச்சியாவது; சத்தத்தின் பதப்பொருளுணர்ச்சியால் உண்டாகும் அறிவு. சத்தவுணர்வு கருவி; பதப்பொருளுணர்ச்சி வியாபாரம்; சாத்தவுணர்ச்சி பலம்.

சத்தமாவது, ஆத்தனது வாக்கியம்.[1]

ஆத்தன்-உரியோன், நம்பப்படுவோன், உள்ள பொருளைக் கூறுவோன்.

வாக்கியமாவது, பதங்களின் சமூகம்.[2] பதம் வர்ண காரியம்; வர்ணம்[3] நாதகாரியம்; நாதம் சுத்தமாயா காரியம்.

சமூகம்-கூட்டம்.

பதமாவது, ஆற்றலாற் பொருளை உணர்த்து

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து ௬௯-வது பகுதியிற் காண்க.

2. இதனையும் ஆண்டே காண்க.

3. வர்ணம்-எழுத்து.

கின்ற எழுத்தொலி.[1] எங்ஙனம்,—ஆ, குதிரை முதலியன.

ஆற்றலாவது,[2] வாசகமாகிய சத்தத்துக்கு வாச்சியமாகிய பொருளோடு உளதாய கற்பித சம்பந்தம்; எங்ஙனம்,—ஆ என்னுஞ் சத்தத்துக்கு ஆத்தன்மையுடைய பிண்டமாகிய பொருளோடு சம்பந்தம்.

ஆற்றல்-சத்தி. வாசகம்-சொல்வது. வாச்சியம்-சொல்லப்படுவது. கற்பிதம்-ஆக்கப்பட்டது, கற்பிக்கப்பட்டது.

அவ்வாற்றல், இன்ன சத்தத்தால் இன்னபொருள் அறியப்படுவது என்னுஞ் சங்கேதயிதாவின் சங்கேதத்தால் ஆகியது; சங்கேதமே ஆற்றல் என்பதும் ஒருபக்ஷம்.

சங்கேதயிதா-சங்கேதஞ் செய்பவன். சங்கேதம்-நியமம், உடன்பாடு, குறி.

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து ௬௧-வது பகுதியிற் காண்க.

2. ஆற்றலுக்கு இங்கே கூறப்பட்ட இலக்கணம் சைமினிமத நூலார் கூறுமாறுபற்றிக் கூறப்பட்டது. தருக்க சங்கிரகத்தில் 'ஆற்றல் இப்பதத்தால் இப்பொருளுணர்த்துக என்னுமிறைவன் சங்கேதம்' என்று கூறப்பட்டது: இது பொருந்தாமை ஸ்ரீ சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த 'எடுத்தென்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாய'த் தாலறிக.

பத ஆற்றலானது, வழக்கம், உபதேசம், உபமானம், கோஷம், வியாகரணம், விவரணம், சந்நிதானம், வாக்கிய சேஷம் என்பவற்றாற் கிரகிக்கப்படும்.

க. வழக்கு,[1] —ஒருவன் கூறிய வாக்கியத்தைக் கேட்டு மற்றொருவன் வழங்குஞ் செய்கை: எங்ஙனம், —ஏவும் முதியோனாற் கூறப்பட்ட "குடத்தைக் கொணர்" என்னும் வாக்கியத்தைக் கேட்டு, இயற்றும் முதியோனாற் குடங் கொணரப்பட்டமையைக் கண்டு, பக்கத்தினின்ற இளையோன் குடத்தைக் கொணர்தலாகிய காரியம் "குடத்தைக் கொணர்" என்னும் வாக்கியத்தாற் பிரேரிக்கப்பட்டது எனத் துணிவன். பின்னருங் "குடத்தைக் கொணர், ஆவைக் கொணர்" என்பன முதலிய வாக்கியங்களிலே, ஆவாப உத்துவாபங்களாலே குடம் முதலிய பதங்கட்குக் காரியத்தோடு இயைந்த குடப்பொருண் முதலியவற்றில் ஆற்றல் எனக் கிரகித்துக் கொள்வன்.

ஆவாபம் - இடுதல். உத்துவாபம் - குறைத்தல்.

உ. உபதேசம்,[2] — இது குயில் இது மயில் எனப்பொருளைக் காட்டிப் பதங்கூறி அறிவுறுத்தல்.

ங. உபமானம்,—ஒப்புமையறிவு: ஆவினை ஒப்பது ஆமா[3] என்னும் அதிதேச வாக்கியப்பொருள்

---

1. வழக்கு வியவகாரமென வடமொழியிற் கூறப்படும்.
2. உபதேசம் ஆப்தவாக்கியமென்றுங் கூறப்படும்.
3. ஆமா - காட்டுப்பசு.

நினைவோடுகூடி, ஆவோடு ஒத்தலுடைய பொருளைக் காண்டலே ஒப்புமையறிவு. அதனால், இது ஆமா என ஆமா என்னும் பதத்திற்கு ஆமாப்பொருளில் ஆற்றல் கிரகிக்கப்படும்.

அதிதேசம் - மாட்டி யுணர்த்துவது.

ச. கோஷம்,[1]—சொற்பொருளுணர்த்தும் நூல்: எங்ஙனம்,—"சிவன் பெயர் - சங்கரன் பசுபதி சம்பு" என்பது பொருட்பெயர்: "பகவான் சிவனரி பிரமன் புத்தன்" என்பது பெயர்ப்பொருள்.[2]

ரு. வியாகரணம்,—இலக்கணம்; பகுதி, விகுதி, இடைநிலை முதலியவற்றின்பொருளை உணர்த்திப் பதங்களின் சுவரூபமும் பொருளுந் துணிவிக்கும்நூல்: எங்ஙனம்,—"னஃகானொற்றே யாடூஉவறிசொல்."[3]

சு. விவரணம்[4],—வெளிப்படுத்துவது; அப் பிரசித்தமாகிய பதத்தைச் சார்ந்து விளக்குகின்ற பிர

---

1. கோஷம் - நிகண்டு. இச்சொல் கோசமெனவும் வரும்.

2. இவை தருக்காமிர்தத்துக் கூறப்பட்டன.

3. இது தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கம் ரு-வது சூத்திரம்.

4. இங்கே சொல்லப்பட்ட விவரணம் முற்சொல்லப்பட்ட உபதேசமென்பனவற்றைப் 'பொருட்குத்திரிபில்லை யுணர்த்தவல்லின்' 'உணர்ச்சி வாயிலுணர்வோர் வலித்தே' என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்களானும் அவற்றிற்குச் சேனவரையர் கூறியவுரையானும் அறிக.

சித்தபதமாகிய பரியாயபதமும் வாக்கியமும்: எங்ஙனம்,—"பிகம் என்பது குயில்: யாறு என்பது மலையிற்றோன்றி நிலவழியாற் பாய்ந்து, கடலிற் புகும் நீர்ப்பெருக்கு." என்பன. இவற்றுள் முன்னது பிரதிபதம், பின்னது நிருத்தி.

பிரசித்தம் - பயிலப்பட்டது, வழங்கப்பட்டது.

எ. சந்நிதானம்,—அண்மை; ஒரு பதத்தை உரிமையாற் பொருள் குறிப்பிக்கின்ற பிறபதங்கள் அணுகிநிற்றல்: எங்ஙனம்,—"தேமாந்தருவிற் பிகமிருந்து சிந்தைகளிப்பக் கூவியதால்" என்புழிச் சார்பும், வினையுந் தமக்கு உரிமையுடைய குயிற்பொருள் குறிப்பிக்கும். "மாப்பூத்தது, மாவீழ்நொச்சி, யானை மாத்தேரான்" என்புழி வினையுஞ், சார்பிடமும், இனமும் உரிமையால் ஐயமறுத்து விசேடப்பொருள் குறிப்பிக்கும்.[1]

அ வாக்கியசேஷம்,—வாக்கியக்குறை; ஒரு வாக்கியத்தின் பதத்தை ஐயமறத் துணிதற்கு அனுகூலமாகிய குறைவாக்கியம்: எங்ஙனம்,—"அரியவ்விடத்தில் வந்தனனல், கண்டதேவ ருடனெழுந்தக்

---

1. இதனைத் தொல்காப்பியர் 'அவற்றுள், வினைவேறுபடும் பல பொருளொருசொல், வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந், தேறத்தோன்றும் பொருடெரி நிலையே' என்னுஞ் சூத்திரத்தாற் கூறினர். இதனைப் பிரசித்தபதத்தின் சமீபத்தன்மை யென்றலுமாம்.

கண்ணையடியில் வணங்கினர்" என்புழி அரிபதப் பொருளைப் பின்வாங்கிப் தவிவித்தது.

அன்னுவயமேனுந் தாற்பரியமேனும்[1] பொருந் தாதவிடத்து, வாசகத்தோடு ஆற்றலுடைய வாச்சி யப் பொருட்குப் பிறபொருளோடு கொள்ளப்படுஞ் சம்பந்தங் குறிப்பு,[2] எனப்படும்.

குறிப்பு - இலக்ஷணை.

"யாற்றில் இடைச்சேரி" என்புழி, யாறு என் னும் வாசகத்தோடு ஆற்றலுடைய வாச்சியப் பொரு ளாகிய நீர்வெள்ளம் இடைச்சேரிக்கு ஆதாரமாகி அன் னுவயித்தல் பொருந்தாமையின், நீர்வெள்ளத்தோடு கரைக்கு உளதாய சம்பந்தத்தாற் கரை என்னும் பொருளே கொள்ளப்படும். இச்சம்பந்தமே குறிப்பு.[3]

ஆற்றலுங் குறிப்பும் நிகழ்ச்சி என்னும் பொதுப் பெயரால் வழங்கப்படும்.

நிகழ்ச்சி-விருத்தி.

சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடமாம்; ஆத லின் ஆ என்னுஞ் சொல் ஆப்பொருளினும், யாறு

---

1. தாற்பரியம் வினை, சார்பு, இடமுதலியவற்ருல் உணரப்படுவது.

2. இதன் விரிவைத் தருக்கசங்கிரகத்து ௬௬-வது பகுதியின் உரையிற் காண்க.

3. இவ்விலக்ஷணை கௌணீ சுத்தையென இருவகைப் படும். இதனைத் தர்க்காமிர்தத்திற் காண்க.

என்னுஞ் சொல் நீர்வெள்ளத்திலுங் கரையிலும் நிகழ்ச்சியுடையன.

அவா,[1] தகுதி, அண்மை என்னும் மூன்று[2] முடைய பதங்களின்சமூகமே வாக்கியம்; ஏனையன் அல்ல.

அவா-ஆகாங்க்ஷை. தகுதி-யோக்கியதை. அண்மை-சந்நிதி, ஆசக்தி.

அவா ஒருபதந் தன்னோடு அன்னுவயித்துப் பொருண் முடித்தற்குரிய மற்றைப் பதத்தை வேண்டுதல்.

அன்னுவயம்-புணர்ச்சி.

தகுதி பதப்பொருள்கள் ஒன்றோடு ஒன்று பாதையின்றிச் சம்பந்தித்தல்.

பாதை-பாதம், தடை.

அண்மை, அன்னுவயித்தற்கு வேண்டப்படும் பதங்கள் இடையீடின்றி அடுத்து நிற்றல்; அண்மை பதங்கள் தாமதமின்றி உச்சரிக்கப்படுதல் என்பதும் ஒருபக்ஷம்.

"ஆ குதிரை ஆடு யானை" என்பது, அவா விலது; "தீயால் நனைக்க" என்பது, தகுதியிலது;

---

1. அவா—இஃது அவாய் நிலையென்றும் வழங்கப்படும்.

2. இம் மூன்றனையும் தருக்கசங்கிரகத்து ௭௦, ௭௧, ௭௨-வது பகுதிகளாலும், தொல்காப்பியம் சொல்லதிகார முதற் சூத்திர வுரையிற் றொடர்மொழிக்கு இலக்கணங் கூறும் பகுதியானும் அறிக.

"மலை உண்ணப்பட்டது தீயுடையது தேவதத்தனால்" என்பது அண்மையிலது; இவை வாக்கியமல்ல. "மலை தீயுடைத்து, தேவதத்தனால் உண்ணப்பட்டது" என மாறின் அண்மையுடைத்தாம்.

"ஆ நடக்கின்றது, ஆவைக் கொணர்க, யாற்றங் கரையில் ஐந்து கனிகள் உள" என்பன முதலியன அவாமுதலிய மூன்றுமுடைமையின் வாக்கியங்களாம்.

பதப்பொருளுணர்ச்சியாவது, ஆற்றலுணர்வு துணை யாகப் பதத்தாலே தோன்றுவதாகிய பொருளுணர்ச்சி.

"ஆ" என்னும் பதத்துக்கும் "நடக்கின்றது" என்னும் பதத்துக்கும் அந்த அந்தப் பொருளோடு உளதாய சங்கேதவாற்றலை உணர்ந்துகொண்டா னொருவனுக்கு "ஆ நடக்கின்றது" என்னும் வாக்கிய வுணர்ச்சி உண்டாகியபோது, அவ்வாக்கிய சத்தத்தின் பதங்களின் சங்கேதவாற்றல் நினைவாற் பதப்பொரு ளுணர்ச்சி உண்டாக, அதனால்; "தாடி கோடு கால் வால் முதலிய ஆத்தன்மையுடைய பிண்டம் இவ்வாக் கிய நிகழுங்காலத்திற் கால்பெயர்த்திட்டு, முன்னிடம் விட்டு வேறிடங்கூடுதலும் உடைத்து" என்னும் வாக் கியப்பொருளுணர்ச்சி உண்டாம். இங்ஙனமே சத்த வுணர்ச்சியால் வாக்கியப்பொருளுணர்ச்சி தோன்றும்.

வாக்கியத்தைக் கூறுவோர் ஆத்தன், பிராந்தன், வஞ்சகன் என மூவகையராய் இருப்பர்.

பிராந்தன்-திரிபுடையவன். வஞ்சகன்-படிறன்.

அவருள், ஆத்தனுவான், தன்கண் மயக்கமின்மையிற் பொருள்களை உள்ளவாறு உணர்ந்து, காம வெகுளிகள் இன்மையின் அவற்றை உணர்ந்தவாறே கூறுவோன் : ஈசுவரன்,[1] அவதியில்லாத முற்றறிவனாகிய பரமாத்தனாதலின், ஈசுவரீய வாக்கியம்[2] முழுதும் பிரமாணம்.

அவதி - எல்லை. ஈசுவரீயம் - ஈசுவரனது.

இலௌகிக வாக்கியங்களுள்,[3] தமதவதி முற்றறிவராகிய ஆத்தரது வாக்கியமே பிரமாணம்.

இலௌகிகம் - உலகத்தவரது.

வாக்கியத்தின் பிரமாணத்தன்மை பொருட்டகுதியால் உணரப்படும்.

இங்ஙனமே வாக்கியப் பொருளுணர்ச்சிக்குக் கருவியாகிய சத்தவுணர்ச்சியோடு கூடிய சிற்சத்தியே ஆகமப்பிரமாணம் எனப்படும்.

ஆகமப்போலி

இனித் தகுதியின்மையாகிய குற்றத்தோடு கூடிய வாக்கியம், ஆகமப்போலி எனப்படும். பிராந்த

---

1. இதனைத் தருக்கசங்கிரகத்து எ௩-வது பகுதியிற் காண்க.

2. இங்கே ஈசுவரீய வாக்கிய மென்றது வேத வாக்கியத்தை.

3. இலௌகிக வாக்கியமெனினும் உலக வாக்கிய மெனினும் ஒக்கும்.

வாக்கியமும், வஞ்சக வாக்கியமுமே ஆகமப்போலி களாம்.

பிராந்தன், மயக்கத்தாற் பொருள்களை விபரீத மாக உணர்ந்து கூறுவோன்.

வஞ்சகன், அறிந்த பொருள்களைக் காம வெகுளி களால் விபரீதமாகக் கூறுவோன்.

விபரீதம் - மாறு.

வழூஉநிலை, பொருளின்மை, மீண்டுவரல், வீணை விரிதன் முதலிய சொற்குற்றங்களானும், பொய்மை, ஐயம், திரிபு, விரோதம், குறை, மிகை, பயனின்மை முதலிய பொருட்குற்றங்களானும் போலிவாக்கியங் களின் அப்பிரமாணத்தன்மை உணரப்படும்.

இங்ஙனங் கூறிய பிரமாணத்திற்குப் பயன் பிர மேயங்களை உள்ளபடி அறிந்து கொள்ளுதலாம்.

இங்ஙனமே இலக்கணப் பிரமாணங்கள் உரைக் கப்பட்டன.

சாதாரண பீடிகை
முற்றிற்று.

சுருதி நிரூபணம்[1]

சுருதி இலக்கணம்.

அநாதி சுத்தனும், வியாபகனும், நித்தியனும், சுவதந்திரனும், நிரவதி சர்வஞ்ஞனும், சர்வகர்த்தாவும், சர்வானுக்கிரக காரகனும், பரிபூரணனும், சாந்தனும், பக்ஷபாதமிலியும் ஆகிய ஈசுவரனே பரமாத்தன் எனப்படுவன்.

சுவதந்திரன் - தனது தலைமையுடையவன். நிர் அவதி - எல்லை இல்லாத. சர்வஞ்ஞன் - முற்றறிவன். சர்வ கர்த்தா - முற்றுஞ் செய்பவன். அனுக்கிரகம் - உபகாரம். காரகன் - செய்பவன். பரிபூரணன் - மிகு திருத்தியுடையவன். சாந்தன் - காம வெகுளி மயக்கங்கள் ஒழிந்தவன், தணிந்தவன். பக்ஷபாதம் - ஒருபக்ஷத்தில் விழுதல். பரமம் - மிகமேலாகிய, உயர்ந்த.

பரமாத்தனுல் உபதேசிக்கப்பட்ட பாரமார்த்திக வாக்கிய சமூகமே ஆதிச்சுருதி எனப்படும். இதுவே சுருதிலக்ஷணம்

உபதேசித்தல் - அறிவுறுத்தல், உணர்த்தல். பாரமார்த்திகம் - பரமார்த்தமுடையது. பரமம் - மிக மேலாகியது. அர்த்தம் - பொருள், சாதனம், விடயம், பிரயோசனம்.

---

1. நிரூபணம் - ஆராய்ச்சி.

உணர்தற்கு அரியனவாகிய பதி பசு பாசங்களே மேலாகிய பொருள்;[1] உயர்ந்த பயனைத் தருவனவாகிய கிரியையும் ஞானமுமே மேலாகிய சாதனம்; இவைகளே மேலாகிய விடயம்; போக மோக்ஷங்களே மேலாகிய பிரயோசனம்; இவையெல்லாம் பரமார்த்தம் எனப்படும்.

ஈண்டு: "பரமாத்தனல் உபதேசிக்கப்பட்ட" என்பதனாற் பரனது உபதேசம் பெற்ற பராபராத்தராலும், அபராத்தராலுஞ் செய்யப்பட்ட பரமார்த்தமுடைய சுருதிநூல்களும்: "பாரமார்த்திக" என்பதனால் ஈசுவரனாலுஞ் சிவராலுஞ்செய்யப்பட்ட அவாந்தரார்த்தமும்,[2] இலௌகிகார்த்தமும் உடைய நிருத்தம்,[3] சிக்ஷை, வியாகரணம், சோதிடம், மிருதி, புராணம், வைத்தியம், சிற்பம், கணிதம், வார்த்தை முதலிய

---

1. இதனைப் 'பலகலை யாகமவேத மியாவையினுங் கருத்துப் பதிபசுபாசந் தெரித்தல்' என்னுஞ் **சிவப்பிரகாசத்** திருவிருத்தத்தாலும், 'சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருண், மூன்றுள மறையெலா மொழிய நின்றன, வான்றதோர் தொல்பதி யாருயிர்த்தொகை, வான்றிசழ் தளை யென வகுப்பானன்னவே' என்னும் கந்தபுராணச் செய்யுளானு மறிக.

2. அவாந்தரார்த்தம்—இடையிட்ட பொருளை யுடையது.

3. நிருத்தம் முதலிய நான்கும் வேதாங்கங்களின் பகுதிகள்: இவற்றோடு கற்பம் சந்தோவிசிதி என்னு மிரண்டும் கூட்டி வேதாங்கங்கள் ஆறெனப்படும்.

நூல்களுஞ் சுருதிகளாயினும் ஆதிச்சுருதியல்ல என விலக்கப்பட்டன.

இனி ஆத்தனின் வேறாகிய பிராந்தனானும் வஞ்சகனானுஞ் செய்யப்பட்ட நூல்கள் சுருதிகளே ஆகாமையின், அவை தூரத்திற்றள்ளப்படும்.

> பரன்-உயர்வுடையோன். பராபரன்-உயர்வுந்தாழ்வுமுடையோன், அபரன்-தாழ்வுடையோன்.

'ஈசுவரனாற் செய்யப்பட்ட பரோக்ஷார்த்த அனுபவசாதனமே சுருதி; சீவர்களாற் செய்யப்பட்டதல்லாத வாக்கியமே சுருதி; ஆதிசாத்திரமே சுருதி; பிரத்தியக்ஷ அனுமானங்களால் உணரப்படாத புருஷார்த்த உபாயங்களைத் தகுதியாக உணர்த்தும் வாக்கியமே சுருதி'[1] எனக் கூறப்படுஞ் சுருதியிலக்கணங்களும் பொருந்தும்.

> பரோக்ஷ அர்த்தம்—தேச கால வஸ்துத்தன்மைகளால் இந்திரியத்துக்குத் தூரமாகிய அர்த்தம். அனுபவம்-உணர்ச்சி. சாதனம்—கருவி. புருஷ அர்த்த உபாயம்—ஆன்மப் பிரயோசன சாதனம்.

சுருதி, வேதம், ஆகமம், நிகமம், ஆம்நாயம் என்பன முதலியன பரியாயங்களாம்.

இச்சத்தங்களின் வியுற்பத்தி கூறப்படுகின்றது.

---

1. 'காசறு முறையிம்மானத் தடங்கிடாப் பொருளைக் காட்டும்' என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தான் இதனையறிக.

சுருதி 'பரமார்த்தங்களைக் கேட்டற்குக் கருவி; ஈசுவரனிலிருந்து கேட்கப்பட்டது எனினும் பொருந்தும். சுரு-கேட்டல். தி-கருவிப்பொருளுஞ் செயப்படு பொருளும் உணர்த்தும் விகுதி.

வேதம் 'பரமார்த்தங்களை அறிதற்குக் கருவி. வித்-அறிதல்; அது வேத் எனக் குணவெழுத்துப் பெற்று நின்றது; அ என்பது கருவி விகுதி.

ஆகமம் 'பரமார்த்தங்களை முற்றுக உணர்தற்குக் கருவி; வருவித்தற் கருவி. ஆ-முற்றுக, அன்மையாக, பாரம்பரியமாக; கம்-போதல், வருதல், உணர்தல். அ என்பது கருவி விகுதி.

நிகமம், நியதமாக உணர்தற்கருவி. நி-நியதமாக; கம்-போதல், உணர்தல். அ-விகுதி.

ஆம்நாயம், ஆதி குருவிற்றொடங்கிப் பாரம்பரியமாகப் பயிலப்படுவது; கற்கப்படுவது. ஆ-பாரம்பரியமாக. ம்நா-பயிலல், கற்றல்; ய என்பது செயப்படு பொருள் விகுதி.

சுருதி விபாகம்.

சுருதியானது, கருமகாண்டம் ஞானகாண்டம் என்னும் இரண்டு பாகங்களை உடையதாம்.[1]

---

1. 'அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச்செய்த வேதாகமங்கள் கருமகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டமென மூவகைப்படும்' என்பது சிவஞானசித்தி அளவை ௰௩-வது திருவிருத்தத்திற்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த உரைப்பகுதி.

காண்டம்-வருக்கம், தொகுதி.

அவற்றுட் கருமகாண்டமாவது, துக்கமொழிப்பனவும், சுகம் விளைப்பனவும், ஞானம் பயப்பனவும் ஆகிய கிரியைகளைப் பயனும், கருவியும், செய்யும் பிரகாரமும் ஆகிய முக்கூறமைந்த பாவனையோடு நியமிக்கும் பாகம்.

ஞானகாண்டமாவது பதி, பசு, பாசம், தத்துவ தாத்துவிக சிருட்டி, சங்காரம், முத்தியுபாய சாதனம் முதலியவற்றை இலக்கணப் பிரமாணங்களாலே நிரூபிக்கும் பாகம்.

இன்னும் அச்சுருதியானது மந்திரம், பிராமணம்[1] என இரண்டு பாகமாகப் பகுக்கப்படும்; இவையிரண்டுந் தோத்திரம் சாத்திரம் எனவும்படும்.

> மந்திரம் - நினைக்கப்படுவது, நினைவிப்பது, உபசரிக்கப்படுவது, உபசரிப்பது. மந் - மதித்தல். திர - விகுதி. பிராமணம் - பிரம சம்பந்தமுடையது. பிரமம் என்பது தத்துவ உணர்வும், ஒழுக்கமுமாம்.

அவற்றுள், மந்திரங்களாவன, கடவுளை நோக்கி அழைத்தல், புகழுதல், வேண்டல், ஏவுதல், ஆராய்தல், வினவல், விடுத்தல், புலம்பல் முதலிய செயல்களைத் தனித்தனியே உடையனவாய் ஞானக் கிரியைகளை நினைவிப்பனவாய்ப் பத்தி சுத்தி சித்திகளைப் பயப்பனவாய் உள்ள வாசகங்களாம்.

1, 2. இப்பாகுபாட்டினை ஸ்ரீ அரதத்தாசாரியர் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தில் 'மந்த்ரார்த்தவாத விதி

பிராமணம் விதிவாதமும் அர்த்தவாதமும் என இரு பிரிவினதாம்.[2]

வாதம் - கூறுவது. அர்த்தம் - பிரயோசனம்.

விதியானது,[3] செய்யப்படாதனவற்றைச் செய்விப்பதாகிய கருமவிதியும், உணரப்படாதனவற்றை உணர்விப்பதாகிய ஞானவிதியும் என இருவகையினதாம். இவ்விருவகையும் ஏனைய எல்லாவற்றையுந் தம்பாற்படுத்து நிற்குந் தன்மையவாதலிற் சிறப்புடையன.

அர்த்தவாதமாவது, விதியை வழங்குவித்தற் பொருட்டு விதிப்பயனை உள்ளதனானும் இல்லதனானும்

பிர்பஹி-ஹதா விபக்தோ யச்சப்தராசிர நபேக்ஷிதயா ப்ரமாணம் | ஸோயம் விமத்ஸர விம்ருஷ்ட பதார்த்த தத்வோ வேத: ப்ரகாசயதி கேவல மீச்வா த்வாம்' || என்றருளிச் செய்தமையானறிக.

3. 'விதியெல்லாம் எய்தாததனை எய்துவிப்பதூஉம், ஒருகாலெய்தி யொருகா லெய்தாதாகற்பாலதனை அவ்வழியுமிகந்துபடாமற் காத்து நியமமாக எய்துவிப்பதூஉம், ஈரிடத் தெய்தற்பாலதனை ஒருமருங்கு மறுப்பதூஉமென மூவகைப்படும்' 'எய்தாததனை யெய்துவித்தன் முதலிய மூன்றனையும் வடநூலார் முறையே அபூர்வவிதி, நியமவிதி, பரிசங்கியாவிதி யெனக்கூறுப. அவையெல்லாம் மீமாஞ்சை நூலுட் காண்க' என்பது சிவஞானபாடியம் முதற்சூத்திரத்து மூன்றுமதிகரண வுரைப்பகுதி. நியாயப்பிரகாசத்து ௧௨0௮, ௧௨0௯, ௧௨௧0 பகுதிகளாலும் மேற்கூறப்பட்டவற்றை யறிக.

வருணித்துக் கூறுவது; அது நியமவிதி விடயத்தைப் புகழ்தலும், விலக்குவிதி விடயத்தைப் பழித்தலும், பிறர் செய்கை காட்டலும், பழையநிகழ்ச்சி கூறலும் உடையதாகி, விதியின் சேடமாய்நிற்கும்.[1]

இங்ஙனங் கூறப்பட்ட மந்திரவாதம், விதிவாதம், அர்த்தவாதம் என்னும் மூன்றும் விரவியதே சுருதியாம்.

அதி கம்பீரமாகிய சுருதியின் பொருளை உணர்தற்கு உபகாரமாகிய நூல்கள், சுருதியின் அங்கம் எனப்படும்; அவை நிருத்தம், வியாகரணம், சிக்ஷை, சந்தசு, சோதிடம், கற்பம் என ஆறும்.[2]

கம்பீரம் - ஆழம்.

நிருத்தத்திலே பதவிவரணமும், வியாகரணத்திற் பத இலக்கணமும், சிக்ஷையிலே பத உச்சாரண இலக்கணமும், சந்தசிற் செய்யுளிலக்கணமும், சோதிடத்திற் கால விசேட இலக்கணமும், கற்பத்திற் கிரியாப்பிரயோக இலக்கணமும், நிரூபிக்கப்படும்.

---

1. இவ்வருத்தவாதம் குணவாதம், அநுவாதம், பூதார்த்தவாதமென மூவகைப்படும். அவற்றின் இலக்கணங்களை நியாயப்பிரகாசத்து கஉகரு, கஉகச, கஉகடு-வது பகுதிகளிற்காண்க.

2. நிருத்தம் யாஸ்காசாரியராலும், வியாகரணம் சிக்ஷையிரண்டும் பாணினி முனிவராலும், சந்தசு பிங்கல நாகாசாரியராலும், சோதிடம் இலகதாசாரியராலும், கற்பம் ஆசுவலாயனர் போதாயனர் முதலியோராலுஞ் செய்யப்பட்டனவென அறிக.

சுருதிப் பிரமாணம்

இனிச் சுருதியின் உண்மைத்தன்மையைத் துணிதற்குச் சுருதி, சாத்திரம், உலோகப் பிரசித்தி என்னும் மூன்றும் பிரமாணமாம்.

அவற்றுட் சுருதியானது, தனது சாமர்த்தியபத்தினலே தன்னுண்மைக்குப் பிரமாணமாம்.

சாமர்த்தியம்-தகுதி, வலிமை, இணக்கம்.

சுருதியின் சாமர்த்தியம் சத்த சாமர்த்தியமும், அர்த்தசாமர்த்தியமும் என இருவகைப்படும்.

சுருதியின் சாமர்த்தியங்களாவன:—

க. சுருதியின் சத்தங்களெல்லாங் குற்றமின்றிக் குணலக்ஷணமமைந்த வர்ணம், பதம், வாக்கியம் முதலிய அவயவ அவயவிகளாய் இணங்கிப், பொருளைப் பொருந்த உணர்த்தற்கு அநுகூலமாகிய முறையுடையனவாய் நிற்றல்.

உ. சில விசேடசத்தங்கள் விதிப்படி உச்சரிக்கப்பட்டுழி வியாதிநீக்கம், விடநீக்கம், பிசாசநீக்கம் முதலிய பிரத்தியக்ஷ சித்திகளைப்பயத்தல்.

௩. சிலசத்தங்கள் சுருதியின் ஆக்கியோன், பெயர், பகுப்பு, அளவு, விடயம், பயன், சுருதி உற்பத்தியின் காலம், இடம், பிரகாரம் என்பவற்றை உணர்த்திநிற்றல்.

இவை மூன்றுஞ் சத்த சாமர்த்தியங்கள்.

ச. சுருதியில் உணர்த்தப்பட்ட அர்த்தங்களெல்லாம் எல்லாக்கூறுகளிலும் வியாகாதம்[1] புநருத்தத்துவம்[2] முதலிய விரோதமின்றி இணங்கி, வேறு பிரமாணங்களாலே தடுக்கப்படாமல், மெய்யாகிப், பதி மகிமை விளக்கற்கும், பசுப்பிரயோசன சித்தி விளைத்தற்கும் அநுகூலமாயிருத்தல்.

ரு. சுருதியில் உணர்த்தப்பட்டனவாய்ச், சீவர்களுக்கு அநுபூதி[3] யுத்தி மாத்திரத்தாற் கிரகிக்கப் படாதனவாய் உள்ள பரோக்ஷமாகிய பரமார்த்தங்கள் யுத்தியோக்கியமாக உரைப்படுதல்.

சு. சுருதியில் உணர்த்தப்பட்ட சில விசேடப் பொருள்கள் விதிப்படி பிரயோகிக்கப்பட்டுழிக், குறிக்கப்பட்ட பிரத்தியக்ஷ சித்தியைப் பயத்தல்.

எ. சுருதியிற் கூறப்பட்ட இறந்ததும், எதிர்வதும், நுண்ணியதும், மறைந்ததும், சேயதும் ஆகிய இவ்விதப்பட்ட அர்த்தங்கள் பொய்ம்மையின்றி உண்மை யுடையனவாதல்.

இவை நான்கும் அர்த்த சாமர்த்தியங்கள்.

சுருதியின் அங்கங்களின் சாமர்த்தியமுஞ் சுருதி சாமர்த்தியமேயாம்.

இச்சாமர்த்தியங்களுள், மூன்றுவது சத்தப்பிரமாணம்; ஏனைய ஆறும் அனுமானப்பிரமாணம்; அவற்

---

1. வியாகாதாம் - முன்னொடு பின் முரணுதல்.
2. புநருத்தத்துவம் - கூறியது கூறுதற்றன்மை
3. அநுபூதி - அநுபவம்.

றுள்ளும் முதலாவதும், நாலாவதும் சுருதிப் பொதுத் தன்மையையும், ஏனையன சுருதிச் சிறப்புத்தன்மையையும் உணர்த்துவன; இரண்டாவதும், ஆறுவதும், எழாவதுங் காட்சியானும், ஏனையன உரையானும் உணர்தற்பாலன.

முதலாவதும், நாலாவதும், ஐந்தாவதும் அகண்டச்சுருதியில் இருப்பன; ஏனையன கண்டச் சுருதியில் இருப்பன.

இனிச் சாத்திரங்களாவன, சுருதியின் வேறாகிய நூல்களாம்:[1] அவை அனுகூலசாத்திரமும், பிரதிகூல சாத்திரமும், உதாசின சாத்திரமும் என மூவிதமாம்.

> அனுகூலம்-உறவானது. பிரதிகூலம்-பகையானது.
> உதாசினம் - நொதுமலானது.[2]

அவற்றுள் முன்னைய இரண்டுமே பெரும்பான்மையாகச் சுருதிக்குப் பிரமாணமாம்.

அனுகூல சாத்திரமாவது, ஆத்தவாக்கியமாகி, ஐகிகார்த்தங்களையும் பரோக்ஷார்த்தங்களையுங் குற்ற

---

1. ஸ்ரீ சிவஞான சுவாமிகள் 'நூலெனப்படுவன வெல்லாம் ஒரு நிகரானவாதலின்றி முதனூல் வழிநூல் சார்புநூல் பூருவபக்க நூலெனப் பல வேறுவகைப்பட்டு' எனச் சிவஞானசித்தி எட்டாஞ்சூத்திரம் ௧௪-வது செய்யுளுரையிற் கூறுதல் காண்க.

2. நொதுமல் - நண்பு பகையிரண்டுமில்லாதது.

மற உணர்த்திச், சுருதியின் முதன்மையை விளங்கப் போதிக்கின்ற வழிநூலாம். இது சத்தப்பிரமாணம்.

ஐகிகம் - இம்மைக்குரியது. பரோக்ஷம் - பிரத்திய க்ஷமாகாதது.

பிரதிகூல சாத்திரம், அநாத்த வாக்கியமாகி, ஐகிகார்த்தங்களையும் பரோக்ஷார்த்தங்களையுங் குற்ற முற உணர்த்தி, நியாயமின்றிச் சுருதியை விரோதிக் கின்ற விரோத நூலாம்; அஃது அநாத்த வாக்கிய மென்பது, அதன் சாமர்த்தியமில்லாமையால் விளங் கும்.

துர்ப்பலமாகிய விரோதநூலாற் பாதிக்கப்படாத தன்மையே, பிரபலமாகிய சுருதியின் முதன்மையை உணர்த்தும் அனுமானம்; அதனை எதிர்மறையாற் பயக் கும் விரோதநூல் அனுமான காரண சத்தம்.

உதாசீனசாத்திரம் சுருதியைச் சார்தலும் மாறு தலுமின்றி, ஐகிகார்த்தங்களை உணர்த்துகின்ற நொதுமனூல்; அது ஏகதேசத்திற் சுருதிவிடயங்க ளுக்கு இணங்குதலாற் பிரமாணமாம். இது சத்தம்.

இனி உலோகப்பிரசித்தி என்பது, உலகத்திலே நிகழும் பிரசித்தி; இது ஆரியலோகப் பிரசித்தி என விசேடிக்கப்படும்.

ஆரியம் - நற்குலமுடையது, முறையுடையது, நல் லது, பூசிக்கப்படுவது. உலோகம் - பூமி, சனம். பிரசித்தி - வழக்கம், பயிற்சி, வெளிப்பாடு, பரந்து நிகழும் நிகழ்ச்சி.

ஆரியபூமி என்பது, ஆதிகுருவாகிய கடவுளும்,[1] அவனருள்பெற்ற திவ்விய சீடகணமுங் காலந்தோறும் வெளிப்பட்டருளிய நல்லிடங்களோடு கூடியதாய், ஆதியிற்றொடங்கி இடையறாது தொடர்ந்து நிகழ்கின்ற நல்லியற்கையும், நற்பொருளும், நற்சனமும், நற்சாத்திரமும், நல்லறிவும், நற்றொழிலும், நற்பயனும் என்னும் இவற்றை உடையதாயுள்ள சுத்தபூமி.

ஆரியசனம் என்பது, ஆரியபூமியில் ஆதிதொட்டு வசிக்கின்ற நற்பரம்பரையும், நல்லறிவொழுக்கமும், நற்பத்தியும், நற்சித்தியுமுடைய உயர்ந்தசனம்.

உலோகப் பிரசித்தி உலோக சம்பிரதாயமும், உலோகா சரணமும் என இருவிதமாம்.

சம்பிரதாயம் - பாரம்பரியமாகவரும் உபதேசநியமம்.
ஆசாரணம் - செய்கை, ஒழுக்கம், நடை.

ஈண்டு உலோக சம்பிரதாயமாவது, இதுவே ஈசுவரியமாகிய சுருதி எனவும், இதுவே சுருதியின் வர்ண பத சுர வாக்கிய உச்சாரணநியமம் எனவும் இப்படியே சுருதியை நியமிப்பதாகிப், பண்டுதொட்டு

---

1. சிவபெருமானே ஆதிகுருவென்பதனைத் 'திருமாலிந் திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வே ளாதித், தருமமுது குரவருக்குந் தனதருளா லாசிரியத் தலைமை நல்கி, வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த, வுருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை யுளத்தில் வைப்பாம்' என்னுஞ் சிவதத்துவவிவேகச் செய்யுளாலறிக.

நெடுங்காலம் பல ஆரியசனங்களிடத்திற் பாரம்பரியமாகப் பயின்றுவரும் உபதேச நியமம். சம்பிரதாயம் பழையதும் பரந்து நிகழ்வதுமாயிருத்தலிற் காலதேச வியாபியாதலானும், நிகழ்விப்போருடைய தகுதியானுஞ்[1] சமூலமாம் என உணரப்படும். இது சத்தம்.

சமூலம் - மூலமுடையது.

உலோகாசரணமாவது, சுருதிவிடயங்களை அதிப்பிரயாசத்தோடு உணர்தலும், உணர்த்தலும், அநுட்டித்தலும், அநுட்டிப்பித்தலும், பத்தி சித்தி சுத்தி முத்திகளைப் பெறுதலும், பெறுவித்தலுமாகிய ஆரியசனங்களின் செய்கையாம்; இவை காட்சியானும், கேள்வியானும், சரித்திரங்களானும் உணரப்படும். இது அநுமானம்.

இங்ஙனங் கூறப்பட்ட சுருதிசாமர்த்தியம், சாத்திரம், உலோகப் பிரசித்தி என்னும் மூன்றுஞ் சுருதியுண்மைக்குப் பிரமாணமாம்.

அம்மூன்றனுட், சுருதிசாமர்த்தியம் சுருதியின் அகத்திருக்கும் பிரமாணமாதலின், ஆந்தரப் பிரமாணம் எனப்படும்; ஏனைச் சாத்திரமும், உலோகப்பிரசித்தியும் சுருதியின் புறத்திருக்கும் பிரமாணமாதலின், வாகியப்[2] பிரமாணம் எனப்படும்.

---

1. நிகழ்விப்போருடைய தகுதியாவது சம்பிரதாயம் நடைபெறுமாறு செய்பவரது கௌரவத்தன்மை.

2. வாகியம் - பாஹ்யமென்பதன் திரிபு.

ஆந்தரம் - அகத்தது. வாகியம் - புறத்தது.

வாகியப் பிரமாணம் ஆந்தரப் பிரமாணத்தைச் சார்ந்து உபகாரகமாய் நிற்றலின், அதனினும் ஆந்தரப் பிரமாணமே பிரபலம்; ஆந்தரப் பிரமாணங்களுள்ளும் அனுமானங்கள் பிரபலம்; அவற்றுள்ளும், கண்டச் சுருதிகளில் உள்ளவை அக்கண்டங்களோடு சுருதியிற் பிரிந்து நிற்குமிடத்து அவற்றின் மூலநிலையை எளிதினுணர்தல் கூடாமையின், அகண்டச் சுருதியில் உள்ளனவே பிரதானம். காட்சியானுணரப்படுவனவற்றினும் உரையானுணரப்படுவனவே எல்லாருக்கும் உபயோகிகளாக்கப்படுவன; பிரதானங்களுக்கு ஆவசியக அங்கமாயின், அப்பிரதானமும் பிரதானமாம்; ஆதலின் முதலாவதும்,[1] நாலாவதும், ஐந்தாவதுமாகிய அனுமானங்களும், மூன்றாவதாகிய சத்தமும் என்னும் நான்கும் பிரதானப் பிரமாணங்களாம்; அவற்றுள்ளும், சுருதியின் பொதுத்தன்மையோடு கூடிய சிறப்புத்தன்மையை நியதமாக உணர்த்தி, ஏனையவற்றையுந் தன்பாற்படுத்து நிற்றலின், ஐந்தாவதே அதிப் பிரதானப் பிரமாணமாம்.

அவ்வனுமானங்களைச் சுருக்கியடக்கிய இரண்டு அனுமானங்கள் பிரயோகிக்கப்படுகின்றன:—

---

1. இங்கே சொல்லப்பட்ட முதலாவது நாலாவது ஐந்தாவது மூன்றாவது ஐந்தாவது என்பன முன் சுருதிப் பிரமாணமென்னும் பகுதியிற் கூறப்பட்ட சுருதி சாமர்த்தியத்தின் இலக்கங்களாம்.

க.—இச்சாத்திரம் ஆதிச்சுருதி, யுத்தியதீதார்த் தங்களை யுத்தியோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கிய மாதலால், யாது ஆதிச்சுருதியன்று அது யுத்தி யதீதார்த்தங்களை யுத்தியோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கியமுமன்று, சிவசாத்திரம் போல என்பது. இது கேவல வியதிரேகியனுமானம்.

> யுத்தி - கருதல், பொருந்தல், பொருத்தல், நியாயம். அதீதம் - கடந்தது, மேற்போனது, எட்டாதது. அர்த்தம் - பொருள், பயன். யோக்கியம்-பொருந் துவது, இணங்குவது, ஏற்பது, தக்கது, விரோத மாகாதது.

இதனுள்: "யுத்தியதீதார்த்தங்களை யுத்தி யோக்கியமாக உணர்த்தும் ஆதிவாக்கியமாதலால்" என்பதே ஏது.

இதன் விவரணங் கூறப்படுகின்றது:—

யுத்தி என்பது அனுமானமும், அனுமிதியும், காணப்பட்டதைப் போலக் காணப்படாததைக் கற்பித் தலும், சாதக பாதகப்[1] பிரமாணங்களைப் பிரயோகித் தலுமாம்.

> சாதகம் - சாதிப்பது.

ஒரு பொருளிலே மாறுபட்ட இரண்டு தன்மை யாகிய விகற்பம் இருத்தலின்மையின், நியாய வித்தி

1. பாதகம் - தடை.

யாப்பியாசம்[1] முதலியவற்ருல் விளங்கிய புத்தியில், அப்பொருளைத் திருட்டாந்தமாகக் கொண்டு முடியும் யுத்தி, புருட புத்திதோறும் விகற்ப முடையதன்று; பொருள்களெல்லாம் ஒத்தவியல்பும் ஒவ்வாவியல்பும் உடையனவே யாதலின், அவ்வியல்புபற்றி முடிக்கப் படுந் தாட்டாந்திகத்திலும் யுத்தி விகற்பமுடைய தன்று.

தாட்டாந்திகம்-திருட்டாந்தத்தான் முடிக்கப்படுவது.

பொருளின் விசேடமுணராமை முதலிய குற்றம் பற்றிய புத்தியின் முடியும் போலியுத்தி மாத்திரம் விகற்பமுடையதாம்.

யுத்தியதிதம் என்பது, அனுபூதி யுத்திகளாற் கிரகிக்கப்படுதற்கு யோக்கியமல்லாதது. யுத்தியதீதம் எனவே அனுபூதியதிதம் என்பதும் விளங்கும்.

சத்த பரிச ரூப ரச கந்தங்களாகிய மூர்த்த குணங்களும்[2] வெளிப்பட்ட குறியும் இல்லாதனவும், நுண்ணியனவும், மறைந்தனவும், சேயனவும் யுத்தி யதிதங்களாம்.

அர்த்தம் என்பது, அறியப்படுவதும் பெறப்படு வதும். இரு என்னுந் தாதுவின் ஆதேசமாகிய அர் என்பது போதலும், அறிதலும், பெறுதலும். தகாரஞ்

1. நியாய வித்தியா அப்பியாசம் - நியாயசாத்திர அறிவுப் பழக்கம்.
2. மூர்த்தகுணம் - பௌதிக குணம்.

செயப்படுபொருள் விகுதி. பதி பசு பாசங்களாகிய பொருளும், போக மோக்ஷங்களாகிய பயனும், அவற்றின் சாதனமும் அர்த்தங்களாம்.

யுத்தி யோக்யமாதல் என்பது, அவ்வதீதார்த் தங்கள் உரையானுணரப்படுமிடத்துத் தம்மியல்பான் ஒன்றோடொன்று இணங்குதலும், திருட்டாந்தமாகிய பிறபொருள்களின் இயல்போடு ஒருவாற்றானும் பல வாற்றானும் ஒத்து இணங்குதலும், ஒரோவழி அநுபூதி யுத்திகளானுணரப்படுமிடத்து விபரீதமாகாமையும் உடையனவாகிப், பரீக்ஷகருடைய யுத்திக்குப் பொருந்துவனவாதல். கால தேச பேதத்தில் வெவ்வேறு பொருள் விசேஷங்களையறிந்த பரீக்ஷகருடைய யுத்திக்கும் அவை யோக்கியமாயிருத்தல், சாத்திர லோகப் பிரசித்திகளால் உணரப்படும்.

ஆதிவாக்கியம் [1] என்பது, பிறிதோர் வாக்கியத்தின் வழியே செய்யப்படாது முதல்வனால் முதற் கட் செய்யப்பட்ட மூலமாகிய வாக்கியம்.

இனி எது விசேஷணப் [2] பிரயோசனங் கூறப் படுகின்றது :—

---

1. இதனையே ஸ்ரீ அரதத்தாசாரியர் 'அநபேக்ஷிதயா ப்ரமாணம்' என்றருளிச் செய்தனர். சுலோக முழுவதும் ருக வது பக்கத்து 1, 2, குறிப்புக்களிற் காண்க.

2. விசேஷணம் - அடைமொழி.

ஈண்டு "யுத்தியதீத" என்பதனுல் அனுபூதி யுத்தி யோக்கியப்பொருளை யோக்கியமாக உணர்த்தும் ஆத்த சாத்திரங்களிலும், "யுத்தியோக்கியமாக" என்பதனுல் யோக்கியப்பொருளையேனும், அதீதப்பொருளையேனும் அயோக்கியமாக உணர்த்தும் பிராந்தவஞ்சக சாத்திரங்களிலும், "ஆதி" என்பதனுற் சுருதியையுணர்ந்த பராபர அபராத்தாற் செய்யப்பட்டுச் சுருதிப்பொருளையே உணர்த்துகின்ற பிரகரண சாத்திரங்களிலும் இவ்வேதுவுக்கு வியபிசாரம் விலக்கப்பட்டது. ஆதலின் இவ்வேது அநைகாந்திகமன்று; விபக்ஷத்தில் இருத்தலின்மையின் விருத்தமுமன்று; பக்ஷத்திலிருத்தல் உணரப்பட்டுழி, அசித்தமுமாகாது.

அங்ஙனமாக, நியாயவித்தியாதி சாத்திராப்பியாச சாமர்த்தியத்தால் விளங்கிய சமர்த்தபுத்தியுடைய அதி சமர்த்தனுகிய வஞ்சகனெருவன், தன்னுலுணரப்படாத அதீதார்த்தங்களைத் தன்புத்தியாற் கற்பித்து, அவை பிறர் யுத்தி பரீக்ஷைக்கு யோக்கியமாகும்படி தன் யுத்தி பரீக்ஷைகொண்டே நியமித்துக் கூறுவானுயின், அந்நூல் யுத்திக்கு யோக்கியமாக உணரப்படாதோ எனின், அது பயின்றவற்றையே யோக்கியமெனக் கொள்ளுமியல்பினராகிய இலௌகிகர் சிலருக்கு யோக்கியம்போன்று உணரப்படுமாயினும், சற்சாத்திரபரிசீலனமும், சூக்ஷ்மபுத்தியும், ஊகாபோக சாமர்த்தியமும்[1] உடைய பரீக்ஷகர்

1. ஊகாபோக சாமர்த்தியம் - வெளிப்படவில்லாதவற்றை யுணர்ந்து பொருளை அனுபவிக்கும் திறமை

களுடைய யுத்திபரீக்ஷைக்குப் பாஸ்பர விரோதம், திருட்ட விரோதம், அநுபவ விரோதம் என்பவற்றை யுடைமையாற் பலவாற்ருல் அயோக்கியமாகவே உண ரப்படும்.

சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மனு டர் எத்துணைச்சாமர்த்தியம் அடையினும், அதீதப் பொருள்களைத் தம்மாற்றலாற் கிரகிக்கமாட்டார்; தாம் பெற்ற கருவிகொண்டு உணர்தற்கு யோக்கியமான பொருள்களுள்ளுஞ் சிலவற்றையே உணர்வர் ; அவற் றுள்ளுஞ் சிலவற்றையே ஐயந்திரிபின்றியுணர்வர்; அவற்றுள்ளுஞ் சிலவற்றையே விசேடித்துணர்வர்; உணர்ந்தவற்றுள்ளுஞ் சிலவற்றை மறப்பர்.

அவர் தம் புத்தியால் விசேடித்துணர்ந்த பொரு ளைமாத்திரம் உள்ளபடியமைத்துக் கூறும் நூல் யோக்கியமாம். அதிலும் ஒரோவழிக் குற்றங் காணப் படும்.

"அரியகற் ருசற்ருர் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யறிதே வெளிறு"[1]

இனி உணர்ந்த பொருளோடு விசேடித்துண ராத பொருளையுங் கலந்துகூறும் நூலிற் பல குற்றங்

1. திருக்குறள் ருக. ந. இத்திருக்குறள் அமைச்சர் முதலாயினுரை அரசன் தெரிந்து தெளியுமாறு கூறுகின் றது. துரோணர் அரியகற் ருசற்ருரை அரசன் தெளியலா மென்பதனை மறுத்துத்திருவள்ளுவர் இது கூறுகின்ருர்.

கள் காணப்படும்: ஆகவே உணரப்படாத பொருள்களைப் புத்தியாற் கற்பித்துப் பொருத்திக்கூறும் நூலிற் காணப்படுங் குற்றங்கள் அளவுபடுவனவா?

புத்தியானது, தனக்கு அடங்காத விடயங்களைக் கற்பித்து, யுத்தி பரிக்ஷை செய்து நியமிக்கப் புகுங்கால், தன் சாமர்த்தியமிழந்து செல்லவேண்டும்: செல்லவே, ஆண்டுத் தன் வியாபார முடித்தற்குத் தக்க கருவியாகாது; தகாத கருவியேயாம்; அதினுங் காம வெகுளி மயக்கங்களினுற் கலங்கிய புத்தி மிகத்தகாத கருவியேயாம். தகாத கருவியான் முடிந்த காரியமாகிய நூல் தக்கதாகுதல் எங்ஙனம்?

"காரணந் தன்னெடொத்துக் காரியந்தோன்றும் யாண்டுங் - காரண விரோதியாகிக் காரியந் தோன்றவின்றே"

மனுடன் குறைவுடையனுதலின், அவனுலாகிய காரியங்களுங் குறைவுடையனவேயாம்; ஈசுவர சிருட்டியுஞ் சிவசிருட்டியுந் தம்மியல்பான் வேறு வேருயிருக்கும்; மனுடன் ஈசுவர சிருட்டியோடொப்பச் சிருட்டிசெய்தற்கு ஒருகாலத்தும் வல்லனல்லன்; ஈசுவரசிருட்டியைக் கண்டுழிப், புத்தி யுத்திகொண்டு இலக்ஷண பரிக்ஷணஞ் செய்து, இஃதின்னது என்று துணிதற்கு மனுடன் வல்லனேயாம். சுருதியும் ஈசுவர சிருட்டியாதலின், மனுடநூலுஞ் சுருதியுந் தம்மியல்பான் வெவ்வேருகும்.

சுருதி கண்டங்களேனுஞ்[1] சுருதிகண்டார்த்தங் களேனும் மனுடநூலிற்கலந்து வைக்கப்படினும், அவை தெரியுங்காற் பிரிந்துதோன்றும்; சுருதியோ டொப்ப நூல் செய்தற்கு மனுடன் ஒருகாலத்தும் வல் லனல்லன்; சுருதியைப் பரீக்ஷித்து இது சுருதியன்று இதுவே சுருதி என்று துணிதற்கு வல்லனேயாம்.

குதிரையைச் செய்யமாட்டாத மனுடன் குதிரை யைப் பரீக்ஷித்துப் நிச்சயித்தலும், இரத்தினஞ் செய்யமாட்டாதவன் இரத்தினத்தைப் பரீக்ஷித்து நிச்சயித்தலுந் திருட்டாந்தமாக, ஒருபொருளைச் செய்ய மாட்டாதானும் அதனைப் பரீக்ஷித்து நிச்சயித் தல் கூடுமென்னும் யுத்தி முடிக்கப்படும்.

ஆதலின், போலிச் சுருதிகளெல்லாம் போலியி ரத்தினங்கள்போலப் பரீக்ஷையாலளந்து தள்ளப்படும்; ஆதிச்சுருதி சாதியிரத்தினம்போலப் பாதிக்கப்படா மற் பேதித்து[2] நிற்கும். இங்ஙனமாதலின், அவ் வேதுவுக்கு வியபிசாரமே இல்லை.

இனி இரண்டாமனுமானம்:— “சுருதிவாக்கியங் கள் தமது அர்த்தங்களை உள்ளபடியறிந்தவனாற் செய் யப்பட்டன, சமர்த்தவாக்கியமாதலின், யாது சமர்த்த வாக்கியம், அது தனது அர்த்தத்தை உள்ளபடியறிந் தவனாற் செய்யப்பட்டது, இலௌகிக ஆத்தவாக்கியம்

1. கண்டம் - பகுதி
2. பேதித்தல் - வேறுபடுதல்

போல; யாது தனது அர்த்தத்தை உள்ளபடியறிந்தவனாற் செய்யப்பட்டதன்று அது சமர்த்த வாக்கியமுமன்று, பிராந்த வாக்கியம்போல என்பது. இது அன்னுவய வியதிரேகியனுமானம்.

சமர்த்தம் - சாமர்த்தியமுடையது.

பொருளுணர்ச்சி யின்றிச் சொல்லுணர்ச்சி மாத்திரங் காரணமாகச் செய்யப்பட்ட வாக்கியத்தின் எதுவுக்கு வியபிசாரம் விலக்குதற்பொருட்டுச் "சமர்த்தம்" என்னும் விசேடணங் கொடுக்கப்பட்டது.

சுருதியின் பரமார்த்தங்களைச் [1] சுருதிஞானத்தானன்றி அனுபூதி ஞானமாத்திரத்தான் முதற்கண்ணே உள்ளபடியறிதற்குச் சீவர்கள்யாவருந் தக்கவரல்லாதலின், அதற்குத் தக்கவன் ஈசுவரன் என்பது பெறப்படும்.

இங்ஙனங் கூறப்பட்ட இரண்டனுமானங்களுஞ் சுருதியினுண்மையைத் துணிவித்தற்கு அமையும்.

உலகத்திலே உள்ள சீவர்களெல்லாருக்கும் உணரப்படுவனவற்றை உணர்ந்து, ஒழிக்கப்படுவனவற்றை ஒழித்துச், செய்யப்படுவனவற்றைச் செய்து, பெறப்படுவனவற்றைப் பெற்று, உறுதிப்பயனை உறுதல் அத்தியாவசியகமாகிய பரமப்பிரயோசனமாம்.

---

1. பரம அர்த்தம் - மேலான பொருள்.

சீவர்கள் அப்பொருள்களனைத்தையுங் கண்டுணர் தற்குத் தக்க சுத்தானுபூதிக்கருவியைப் பெற்றவரல்லர்; பெறுதற்குப் பக்குவர் ஆயினோருமல்லர்.

ஆதலின் அவற்றைத் தன்னனுபூதி மாத்திரத்தாற் கண்டுணர்ந்த ஈசுவரன் உபதேசிக்க, அச்சீவர் கேட்டுணர்தற்கு ஓர்கருவி வேண்டப்படும்; அதுவே சுருதியாம்.

ஆகவே சீவர்களை உணர்த்திச் செய்வித்து உறுதிப்பயனை உறுவித்தல் சுருதியின் பிரயோசனம்.

சுருதி நிரூபணம்

முற்றிற்று.

சமய நிரூபணம்

சமய இலக்கணம்

சமயமாவது, சுருதியிலே நியமிக்கப்பட்ட பரமப் பிரயோசன சித்திக்கு அனுகூலமாகிய பதார்த்த நியமமேயாம்: பரசித்திக்கு அனுகூலமாகிய சித்தாந்த பக்ஷமே சமயம் எனினுமொக்கும்.

சித்தாந்தம் - முடிந்த முடிபு.

சமயம், மதம், மார்க்கம் என்பன பரியாயம்.

சமயம் என்பது நியமித்தலும், நியமித்தற் கருவியும், நியமிக்கப்பட்டதுமாம். நியமித்தலென்பது வரையறுத்தலும், துணிதலும், உடன்படுதலும், விதித்தலும், கட்டுதலுமாம்.

இ - போதல், உணர்தல் என்னுந் தாதுவின் ஆதேசமாகிய அய் என்பது, சம் என்னும் உபசருக்கத்தை முதலிற் கொண்டு, உடன்போதல், உடன்படல், நியமித்தல் என்னும் பொருளுணர்த்தி நின்றது. அ என்னும் விகுதி தொழிற்பொருளும், கருவிப்பொருளும், செயப்படுபொருளுங் குறிப்பதாம். "சமயமென்பது நியமமு முடன்பாடும், முடிந்த துணிபு மொழுக்கமு மெல்லையும், குறியுங் காலமுஞ் சபதமுமாகும்" என்பது ஆரியநிகண்டு.

மதம் என்பது கருதப்பட்டதும், உடன்படப்பட்டதும், கோளுமாம்.

மந் - அறிதல், கருதல், உடன்படல் என்பது தாது. த என்பது இறந்தகாலச் செயப்படுபொருளும், தொழிற்பொருளும் உணர்த்தும் விகுதி.

மார்க்கம் என்பது தேடுதற்கருவியும், சுத்தியாக்குதற் கருவியுமாம்.

மார்க் - தேடுதல்; மிருச் என்னுந் தாதுவின் ஆதேசமாகிய மார்க் - சுத்தியாக்கல் என்பன இரண்டும் பகுதிகள். அ என்பது கருவிப்பொருள் உணர்த்தும் விகுதி.

சமயமானது குறித்த பொருளை அடைவிக்கும் வழி போலுதலின் மார்க்க பரியாயம் பெறுமென்றலும் பொருந்தும்.

பரமப் பிரயோசனமாவது, பேரின்பமாகிய முத்தியேயாம். முயற்சிக்கு ஏதுவாகிய இச்சைக்கு விடயமாவதே பிரயோசனம் என்பது.

சமய பதார்த்தம்

சமய விடயமாகிய பதார்த்தங்களாவன, பதி, பசு, பாசம், பதிகிருத்தியம்,[1] பசுகருமம், பசுபோகம் முத்திசாதனம், முத்தி என்னும் எட்டுமாம்.

அப்பதார்த்தங்களைச் சாதி, பண்பு, தொழில் முதலிய இலக்கணங்களானும், பிரமாணங்களானும், நியமிப்பதே பதார்த்த நியமமாம்.

---

1. கிருத்தியம் - தொழில்

அப்பதார்த்தங்களுட் பதியாவான், சுவதந்திர சேதன கருத்தா[1] வாகி எல்லாப் பசுக்களுக்கும் அனுக்கிரகஞ் செய்பவன்.

பசுவாவான், அறிவு இச்சை தொழில்களை யுடைய சேதனனாய் அனுக்கிரகம் பெறுபவன்.

பாசமாவது, சடமாகி, ஆன்மாவின் முத்தியனுப வத்துக்கு விரோதியாயும், போகானுபவத்துக்கு அனு கூலமாயும் உள்ள பொருளாம்.

பதி கிருத்தியமாவது, பதியினுடைய தொழி லாம்: அது சிருட்டி, திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என ஐந்தாம். அவை தமிழின் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல், அருளல்எனப்படும்.[2]

பசு கருமமாவது, பசுக்களுடைய தொழிலாம்: அது புண்ணியம் பாவம் என இரண்டாம்.

பசுபோகமாவது, பசுக்களுடைய இன்ப துன்ப நுகர்ச்சியாம். பசுக்களின் கரும; போகங்களுக்கு உரிய பூமிகள் மத்தியம், சுவர்க்கம், நரகம் என மூன்றும்.

முத்தி சாதனமாவது, முத்தி சித்தியைச் சாதிக் குங் கருவியாயுள்ளது.

---

1. தன்வயமுடைய அறிவுடைய வினைமுதல்

2. இவ்வைந்தனையும் 'அழிப்பிளைப்பாற்றல்' என்று தொடங்குஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும் அதற்குச் சிவஞான சுவாமிகள் அருளிய உரையானுமறிக.

முத்தியாவது, ஆன்மாப் பாசசம்பந்த நீங்கித் தன் சுவரூபம் அடைந்துநிற்றல்.

சமய பதார்த்தப் பிரமாணம்

காரியமெல்லாங் காரணமுடையனவாதலிற், காரியமாகிய உலகத்திற்கு நிமித்தகாரணமாகிய பதி ஒருவன் உளன்.

காரியமெல்லாம் பயன்படுவனவேயாதலிற், காரியமாகிய உலகத்தினுற் படும்பயனைக் கொள்வோராகிய பசுக்கள் உளர்.

அப்பசுக்கள் தடுக்கப்பட்ட அறிவாற்றலுடையராகித், தம்வசமின்றிக், குற்றமுடையனவாகிய நாநாவித போகம்பற்றி உழத்தலின், அதற்குக் காரணமாகிய பாசம் உளது.

பதி பசு பாசங்களின் உண்மையைச் சாதித்தற்கு முறையே ஒன்பதும், ஆறும், மூன்றுமாகிய பிரதான அனுமானங்கள் தருக்கநூல்களிற் கூறப்பட்டன.

பாசஞ் சடமாதலானும், பசுத் தன்வசமிலியாதலானும், அவற்றின் வியாபாரத்துக்குக் காரணமாகிய பதிகிருத்தியம் உளது.

காணப்படுதலால் உலக ஸ்திதியும், காரியப்பொருளெல்லாந் தோற்றமும் அழிவும் உடையனவாதலால் உலகத்தின் சிருட்டி சங்காரங்களும், உயிர்கள் அதிநிந்திதமாகிய[1] போக்கியப் பொருளிலும் பற்று

---

1. அதி நிந்திதம் - மிகவு மிகழப்படுவது.

வைத்து வழுவாது நிற்றலின் அதற்குக் காரணமாகிய திரோதானமும், முற்றறிவனது கிருத்தியங்கண் முடிவின் முக்கியப் பயன்றருங் கிருத்தியத்தை உடையனவாதலின் அனுக்கிரகமும் உள்ளனவாம். இங்ஙனமே பதிகிருத்தியம் ஐந்து விதமாம்.

மனம் வாக்குக் காயங்களால் ஈட்டப்படுதலானும் போக நிமித்தமாதலானும் பசுகருமம் உளது.

போகமானது சுகமுந் துக்கமும் என இருவிதமாதலால், அதின் நிமித்தமாகிய கருமமும் புண்ணியம், பாவம் என இருவிதமாயுள்ளது.

ஈட்டப்பட்ட வினையின் பயனாக அனுபவிக்கப்படுதலிற் போகமும் உள்ளது. சுகதுக்கங்களைக் கலந்து நுகர்தற்குரிய இடமாகிய மத்தியபூமி இருத்தலின், அவற்றை மிகுதிபற்றி வேறு வேறு நுகர்தற்குரிய இடமாகிய சுவர்க்க நரகங்களும் உள்ளன.

சாதனமின்றிச் சாத்தியம் முடியாமையாற், சாத்தியமாகிய முத்தியை முடித்தற்குச் சாதனம் உளது.

முற்றறிவனுடைய கிருத்தியத்தான் முடிவின் முடியும் முக்கியப் பயனாதலின், முத்தியும் உளது.

இங்ஙனமே அட்டபதார்த்தப் பிரமாணங் கூறப்பட்டது.

சமயநிரூபணம்

முற்றிற்று.

சைவச் சுருதி நிரூபணம்

அநாதி பகவானாகிய[1] சிவனால் ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டுப் பிரதம மகாசிருட்டியாரம்ப காலத்திலே செய்யப்பட்ட ஆதிச் சுருதியானது, சாமானிய விசேடபேதத்தால்[2] வேதம் ஆகமம் என இரண்டு மகா விபாகமாயிருக்கும்.

அவற்றுள் வேதமானது, இருக்கு, யசு, சாமம், அதர்வம் என நான்கு விபாகமாம்.

ஆகமமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம். நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டு விபாகமாம்.

அச்சுருதி பரகுருவாகிய சிவனால் ஆதியில் உபதேசிக்கப்பட்டுப், பராபர குருக்களாகிய அணுசதாசிவ

---

1. பகவற் சத்தத்தாற் குறிக்கப்படும் பொருள் ஸ்ரீசிவ பெருமானே யென்பது ஸ்ரீ அரதத்தாசாரியரால் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் வச்சிரலேபஞ் செய்யப்பட்டது.

2. சாமானிய விசேட பேதம் - பொதுச் சிறப்பென்னும் பாகுபாடு. இதனைச் சிவஞானபாடியத்திற் பாயிர வுரையிற் காண்க.

வித்தியேச மந்திரேசர்களாலும், அபர குருக்களாகிய முனி தேவ மனுடர்களாலும் வழிமுறையாகப் போதிக்கப்பட்டுப் பூமியில் வந்து வழங்குகின்றது.

அது சுருதி லக்ஷணமுஞ் சுருதிவிபாக லக்ஷணமுங் குறைவற உடையதாய், ஆறுவகைப்பட்ட அங்கநூல்[1] களோடு கூடினதாய் இருக்கின்றது.

அச்சுருதியின் பிராமாணியமானது, சுருதி சாமர்த்தியம், சாத்திரம், லோகப்பிரசித்தி என்னும் மூன்றானுஞ் சாதிக்கப்படுகின்றது.[2]

அச்சுருதியின் சாமர்த்தியஞ் சுருதியால் நியமிக்கப்படுகின்ற சைவ சமய பதார்த்தங்களின் பொருத்தம் ஆராய்ந்து துணியப்பட்டவழி விளங்கும்.

அச்சுருதிக்கு அனுகூல சாத்திரங்களாவன, புராணங்களும், மிருதிகளும், தரிசனநூல்களும்,[3] உபாகமங்களும்,[4] வைத்தியம், சிற்பம், கணிதம் முதலியனவுமாம்.

---

1. ஆறுவகைப்பட்ட அங்கநூல் - சிக்ஷை, வியாகரணம், சந்தசு, கற்பம், நிருத்தம், சோதிட மென்பன.

2. முன் சுருதிப் பிரமாணப் பகுதியிற் காண்க.

3. தரிசன நூல்களாவன - சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாஞ்சை, வேதாந்தமென்னும் நூல்கள். இவை ஷட்தரிசனமென்றுஞ் சொல்லப்படும்.

4. உபாகமங்கள் மிருகேந்திரம், பௌஷ்கரம், தேவிகாலோத்தரம் முதலிய இருநூற்றேழாம்.

சுருதிக்குப் பிரதிகூல சாத்திரங்களாவன, உலோகாயதம், பௌத்தம், ஆருகதம்,[1] விவிலியம்,[2] முதலாயின[3] அவற்றிற் கூறப்பட்ட சமய பதார்த்தங்களின் பொருந்தாமை ஆராய்ந்து துணியப்பட்ட வழி அவற்றின் துர்ப்பலத்தன்மை விளங்கும்; விளங்கவே சுருதியின் பிரபலத்தன்மை தெளியப்படும்.

பூலோகத்திலே உத்தமோத்தமமகத்துவமுடைய பரதகண்டமும், அதில் வசிக்கின்ற மகாசனமுமே ஆரியலோகம் எனப்படும்.

ஆண்டுள்ள சமயவிடயப் பிரசித்தியே லோகப்பிரசித்தி எனக் கொள்ளற்பாலது.

அச்சுருதியால் நியமிக்கப்பட்ட பதார்த்த நியமமே சைவசமயம் எனப்படும்.

> சைவம் - சிவனாற் செய்யப்பட்டது, சிவனைத் தெய்வமாகவுடையது, சிவசம்பந்தமுடையது. சைவன் என்பது சிவபத்தன் என்ற பொருளுமுடைத்து.

சைவச் சுருதி நிரூபணம்

முற்றிற்று.

---

1. ஆருகதமென்பது ஜைன மதம். சமணமென்பதும் அது.

2. விவிலியமென்பது கிறிஸ்து மதம்.

3. முதலாயின வென்பதனால் மகம்மதிய மதமும், பிரமசமாச முதலிய நவீன மதங்களும் கொள்ளப்படும்.

சைவ சமய நிருபணம்

பதி

இனி அச் சைவச் சுருதியிற் கூறப்பட்ட பதிமுதலிய பதார்த்தங்களின் நியமம் மிகச் சுருக்கி முறையானே கூறப்படும்.

பதி - காக்கிறவன். பா - காத்தல். தி - வினைமுதற் பொருள் விகுதி.

உலகங் காரியமாயிருத்தலால் அதற்குக் காரக[1] மாகிய கருத்தாவும், கரணமும்,[2] நிமித்தமும்,[3] உபாதானமும்[4] உளவென்று அறியப்படுகின்றன. கருத்தாக் கரணத்தைக்கொண்டு நிமித்தத்தைக்குறித்துக் கிருத்தியஞ் செய்தலால், உபாதான காரணத்திலிருந்து உள்ளகாரியமுதித்தல் யாண்டும் நியதமாகக் காணப்படுகின்றதன்றோ.

காரியங்களின் ஒற்றுமைமுடிபாற் கருத்தா ஒருவன் என்பது லொய்ம்மையிற்[5] பெறப்படுகின்றது: காரியங்களின் விசேடத்தாற் கருத்தாவின் விசேடம் விளங்கும்.

---

1. காரகம் - செய்பவன்
2. கரணம் - கருவி
3. நிமித்தம் - பொருட்டு
4. உபாதானம் - முதற் காரணம்
5. லொய்ம்மை - எளிமை; இலகு

கருத்தா அறிந்தே செய்தல்வேண்டுதலின் ஞாதா[1] எனவும், தடையின்றி எல்லா மறிந்து செய்தல் இயலுதலிற் சமர்த்தன் எனவும், என்றும் எங்கும் காரியமியற்றலாற் காலதேசங்களால் வரையப் படாமை யின் அநாதி நித்திய வியாபகன் எனவுங் குறிக்கப்படு கின்றனன்.

அநாதியும் வியாபகனுஞ் சேதனனுமாகிய கருத் தாவுக்கு, ஆதியும் அவ்வியாபகமுஞ் சடமுமாகிய கர ணம் பொருந்தாமையின், அக்கருத்தாவின் சாமர்த்தி யமே கரணம் எனக் கொள்ளப்படுகின்றது.

அநாதி மல பெத்த சீவர்களுக்குரிய போக மோக்ஷப் பிரயோசனசித்தியே கிருத்திய நிமித்த மாம்.

காரியம் அநாதியாகவே மாறிமாறித் தோன்றி ஒடுங்கலானும், வியாபித்தலானும், சடமாதலானும், அதற்கு அநாதி நித்திய வியாபக சடவஸ்துவாகிய மாயையே உபாதான காரணமாம்.

சுவதந்திர வியாபக கருத்தாவுக்கு ஆதாரம் வேண்டப்படுவதின்று. சருவகருத்தாவின் ஞானமுங் கிரியையும் அநாதியே சமர்த்தமாகி விளங்குதலின், அவை விளங்குதற்பொருட்டுச் சரீரமுதலிய பிறகருவி வேண்டப்படா: கருத்தாவின் சத்தியே சரீரகாரிய மியற்றுதலிற் சரீரமென்று கற்பிக்கப்படும்.

---

1. ஞாதா - அறிபவன்

கருத்தாவின் கிருத்தியம் சிருட்டி, திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகம் என ஐந்தாம். அனுக்கிரகம் ஒன்றே பிரதானம்.

கருத்தாவினது தன்மை கருத்திருத்துவம் எனப்படும்.

கருத்திருத்துவமாவது, கிருத்தியமுடிபுக்குச் சுவதந்திர காரகமாதற்றன்மை: அஃது அநாதி சித்தமாம். அந்தக் கருத்திருத்துவத்திற் காரிய சனன அனுகூலமாகிய காரண சாமக்கிரியோடு கூடிய சங்கற்பரூபமாகிய அவிகாரகிருத்தியம் வெளிப்படும்: அதினாலே சடவஸ்துவின் சலனரூபமாகிய விகாரக்கிரியை பிறக்கும்: அதனாற் காரிய முண்டாம். இங்ஙனமாதலிற் கருத்தா அவிகாரியே என்பது. [1]

சனனம் - பிறத்தல். சாமக்கிரி - முழுமை. சலனம்- புடை பெயர்ச்சி.

இங்ஙனங் கூறப்பட்ட பஞ்சகிருத்திய கருத்தாவாகிய பதிக்கு உரியனவாகிய பிரதான குணங்கள் முற்றறிவு, வரம்பிலின்பம், அநாதியறிவு, தன்வசம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என ஆறும். [2]

---

1. இறைவன் அவிகாரி யென்பதைச் சிவஞான போதத்து ஐந்தாம் சூத்திரத்து உ-வது அதிகரண மாபாடிய வுரையிற் காண்க.

2. இறைவனுக்கு இவ்வாறு குணங்களு மிருத்தலின் அவன் சாட்குண்ய னெனப்படுவன்.

சருவ கருத்தாவுக்கு எல்லாப்பொருளேயும் புலப் படக்காணுகின்ற அறிவு உள்ளவழியன்றி எல்லாக் கிருத்தியமுஞ் செய்தல் கூடாமையின் முற்றறிவும், இன்பக்குறைவுண்டாயின், தனது அனுபவ நிமித்தம் பிறிதினை வேண்டுதலுமுண்டாம் ஆகவே சருவ கருத் திருத்துவவிரோதம் எய்துமாதலிற் குறைவற்ற நிறை வாகிய வரம்பிலின்பமும், முற்றறிவு அநாதியன்றி ஆதியாயிற் காரணத்தால் வந்ததெனின் வரம்பின்மைக் குற்றமும், காரணமின்றி வந்ததெனிற் காரண காரிய சம்பந்த நியமபங்கப் [1] பிரசங்கக் குற்றமும் எய்துமா தலின் அநாதியறிவும், பிறர்வசமுண்டேற் பாசத் தடையுமுண்டு என்பது போதலின், வேண்டாத தெய் தலும் வேண்டியதெய்தாமையுமாகிய குற்றம் பற்று மாதலின் தன்வசமும், ஆற்றல் குறையுமேல் எல்லாக் காலத்தும் எல்லாத் தேசத்தும் இளைப்பின்றிக் கிருத் தியமியற்றுதல் இயலாமையிற் குறைவிலாற்றலும், அவ்வாற்றல் வரையப்பட்டதாயின் வரையப்படாத கிருத்தியமியற்றுதல் கூடாமையின் வரம்பிலாற்றலும் ஆகிய இவ்வாறு குணங்களும் பதிக்கு வேண்டப்படு கின்றன.

இங்ஙனமே அநாதிமலமுத்தனுய்ச், சுத்தசாட் குண்ணிய பரிபூரணனுய், அநாதி பெத்தராகிய பசுக் களுக்கு உபகரிக்கும்பொருட்டுத் தனது சத்தியென் னுங் கருவியைக்கொண்டே பஞ்சகிருத்தியஞ் செய்யு மியல்பினனுய், இலயம், போகம், அதிகாரம் என்னும்

---

1. பங்கம் - தவறு.

வியாபாரபேதத்தால் ஈசன், சதாசிவன், சாந்தன்[1] என்னும் மூவித ஸ்வரூபமுடைய ஒருவனேயாய் உள்ள பரமசிவனே பரமபதி என்பது சைவச்சுருதி சித்தம்.

பசு

காரியமாகிய உலகம் அசேதனமாதலாலே தனக்கும், வரம்பிலின்பமுடையனாதலாற் பதிக்கும், குடம் முதலியனபோலப் பரிணாமமுடைமையானும், அனுபோகிக்கப்படுதலானுஞ் சடமேயாதலிற் சரீரத்துக்கும் பயன்படுவதன்று; விசேடகருத்தாவாகிய பதியினாற் செய்யப்பட்டமையிற் பயனற்றதுமன்று: ஆதலிற் பிறர்க்குப் பயன்படுவதே என்பது பாரிசேடப்[2] பிரமாண சித்தம்.

அப்பிறராவார்,—"நான் இருக்கின்றேன் நான் உணர்கின்றேன்" என்றற்றொடக்கத்து வழக்கங்களிலே தனித்தனியே "நான் நான்" என்னுஞ்சொற்களுக்கு விடபங்களாயுள்ள ஆன்மாக்களே.

அவ்வான்மாக்கள் அநாதி பாசபந்தமுடைமையிற் பசுக்களென்று சொல்லப்படுவர்.

பச் - பந்தித்தல். உ-செயப்படுபொருள் விகுதி.

அப்பசுக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகையர். அவர்களுள், விஞ்ஞானகலர்

---

1. இலயபோக அதிகாரசிவபேதங்களைச் சிவஞான பாடியத்திற்காண்க.

2. பாரிசேடம் - ஒழிபு.

ஆணவமலமாத்திரம் உடையவர்; பிரளயாகலர் அத ேனாடு கருமமலமும் உடையவர்; சகலர் அவற்றோடு மாயாமலமும் உடையவர்.

அப்பசுக்களுட் கரும நாசத்தால் அதிபக்குவ மலராயினோர் சமஸ்த பாசத்தின் நீங்கிப் பரமுத்தரா யிருப்பர்.[1]

பக்குவமலராயினோர் பாசத்தின் நீங்கிப், பாச வாசனைமாத்திரம் நீங்காமல் அபரமுத்தராய்ப்,[2] பதி யின் ஆஞ்ஞையினால் அதிகாரகிருத்தியஞ் செய்து கொண்டிருப்பர்.

அற்ப பக்குவரும், அபக்குவரும் ஸம்ஸாரிகளா யிருந்து தத்தமக்கியன்ற தொழிலியற்றுவர்.

இங்ஙனமே அகண்ட பூரண நித்திய வியாபக சச்சிதானந்த ரூபராய், அமூர்த்தராய், அநாதியாகவே பாசத்தால் மறைக்கப்பட்ட சிற்சத்தியுடையவராய், மலசம்பந்தத்தால் அறிவிலராய், மாயாசம்பந்தத்தாற் சிற்றறிவராய்ப், பாச முத்தியின்முற்றறிவராதற்கு யோக்கியராய் உள்ள ஆன்மாக்களே பசுக்கள் என் பது.

பாசம்

உலகத்திலே கட்டுப்பாட்டுள் அடக்கப்படாத வனுகி விடுதலை பெற்றிருப்பவன் தன்வசமுடையவ

---

1. பரமுத்தர் - சிவசாயுச்சியம்பெற்றோர்.
2. அபரமுத்தர் - சுத்ததத்துவபுவனவாசிகள்.

தனுலும், கட்டுப்பாடுற்றவன் பரவசமுடையவனுத லும் பிரசித்தமாகும்.

பசுக்கள் வேண்டாததுபெறுதலும், வேண்டியது பெருமையும் உடையரேயாய் இருக்கின்றனர். இங் ஙன மிருத்தல் பரவசமெனப்படும். பரவசமுடைய ராகவே கட்டப்பட்டவரென்பது நிச்சயிக்கப்படும். ஆதலிற் கட்டிய கருவியே பாசம் என்பது.

பச் - பந்தித்தல். அ - கருவிப்பொருள் விகுதி.

அகண்ட நித்திய வியாபக சத்தும், சடமும், அமூர்த்தமும்,[1] பாதந்திரமும், கழிவனவாகப் பரிண மித்தற் கேற்ற சத்திகளையுடையதும், அஞ்ஞான காரணமும், திரவியரூபியும், ஆன்மசிற்சத்திப் பிரகா சத்தை மறைத்து நிற்பதும் ஆகிய ஆணவமலமே பிர தான பாசமாம்.

அகண்ட நித்திய வியாபக சத்தும், சடமும், அமூர்த்தமும், பரதந்திரமும், காரியரூபமாகப் பரிண மித்தற்கேற்ற சத்திகளையுடையதும், அற்ப ஞானப் பிரகாசமும், திரவியரூபியும், காரியபதார்த்தங்களின் முதற்காரணமும் ஆகிய மாயையும் பாசமாம்.

பிரவாக அநாதியும்,[2] உற்பத்தி நாசம் உடைய தும், அவ்வியாபகமும், சத்தும், சடமும், அமூர்த்த

1. அமூர்த்தம் - வடிவமின்மை.

2. பிரவாக அநாதி-'நாசோற்பத்தி பண்ணிவருமாதலா லநாதி' என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தாலறிக. நாசோற்பத்தி-நாசத்தில் உற்பத்தி யெனவிரியும்.

மும், பாதந்திரமும், விசித்திரமும், போக நிமித்த மும், குணரூபியும், மாயையிலிருப்பதும்,[1] ஆன்மாக்களுடைய நாநாவித போக பதார்த்த சம்பந்தத்துக்கு நிமித்தகாரணமும் ஆகிய கருமமும் பாசம் என்று சொல்லப்படும்.

காரிய பதார்த்தம் காரணமுடையதாய்க், கண்டமாய்,[2] ஆதியந்தமுடைய அநித்தியமாய், அவ்வியாபகமாய்ச், சத்தாய்ச், சடமாய், அமூர்த்தமேனும் மூர்த்தமேனுமாய், அவயவமுடையதாய்ப், பிரிக்கப்படுவதாய், இயங்கியற்றொழில் உடையதாய்ச், சார்புடையதாய் இருக்கும்.

ஆணவமலசத்தி காலத்தாற் பாகமடைந்ததாகியே, ஆன்மசத்தியை மறைத்தலினின்று நீங்கும்; நேத்திர படலம் போல.

கரும மலமுங் காலாந்தரத்திற் பாகமடைந்ததாகியே, போகபலங் கொடுத்துப் பின் அழியும்; கடுக்காய் முதலிய மருந்துபோல.

பாகமடைதற்கேற்ற பொருளெல்லாம் பிறபொருளைச் சார்ந்தே பாகமடையும்; பால்போல.

அங்ஙனமே மலசத்தி மாயாகாரியங்களோடு கலந்தே பாகமடையும். அப்பாகம் உயிர்களின் மல

1. கருமம் மாயையைப் பற்றியிருப்பதென்பதனைச் சிவஞானபாடியம் உ. உ-ல் காண்க.

2. கண்டம் - வரையறைப்பட்டது.

சத்திகளிற் காலந்தோறும் வேறு வேறு பேதமாக உண்டாகும்.

மலபாக தாரதம்மிய காரணத்தால் உயிர்களுக்கு முத்திசாதனங்களும், பத்தி, சிரத்தை, சேவை முதலிய சாதனங்க குணங்களும்; உரியகாலமும் அநேக பேதமாம்: அதனால் முத்தியும் அநேகவிதமாம்.

பதி கிருத்தியம்

பதியானவன், கூடஸ்த நித்திய மலத்தோடும், பிரவாக நித்திய கருமத்தோடும் அநாதி சம்பந்த முடையவராகிய ஆன்மாக்களுக்கு மோக்ஷங் கொடுத்தற்பொருட்டுக் கொண்ட பெருங்கருணையினாலே சிருட்டி, திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகம் என்னும் ஐந்தொழில்களை[1] அநாதியே செய்கின்றான்.

சிருட்டியாவது, முதற்காரணத்திலிருந்து காரியத்தை வெளிப்படுத்தலும், சேதனர்களுக்குத் தேகங்களைக்கூட்டி மறைந்திருந்த அறிவு இச்சை தொழில்களை வெளிப்படுத்தலுமாம்.

அசேதன சிருட்டியுள், மாயை முதலிய காரணத்திலிருந்து மணமுதலிய தத்துவங்களைப் பிறப்பித்தல் தத்துவசிருட்டி எனவும், தத்துவத்திலிருந்து போக தேகரூபமாகிய தாத்துவிகங்களைப்[2] பிறப்பித்தல் தாத்துவிகசிருட்டி எனவும் பெயர்பெறும்.

---

1. இவ்வைந்தொழில்களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருள லெனவும் படும்.

2. தத்துவத்தின் காரியம் தாத்துவிகம்.

திதியாவது, வெளிப்படுத்தப்பட்ட காரியப் பொருள்களைத் தத்தந்தொழிலிலே நிலைபெற நிறுத்தலும், தேகசம்பந்த முடையராகிய சேதனர்களைத் தத்தம் விடயத்திலே நியோகிக்க[1] நிறுத்தலுமாம்.

சங்காரமாவது, காரியங்களை முதற்காரணத்தின் மறைத்தலும், சேதனர்களுக்குத் தேகங்களைப்பிரித்து அறிவு இச்சை தொழில்களை மறைத்தலுமாம்.

திரோபாவமாவது, பாசங்களுக்குச் சாமர்த்திய முண்டாக்குதலாகிய அனுக்கிரகத்தைச்செய்து, அதனாற் சேதனர்களை ஏற்றபோகங்களை வழுவாமல் உண்ணும்படி தடுத்தல்.

அனுக்கிரகமாவது பாசங்களுக்குச் சாமர்த்தியந் தடுத்தலாகிய திரோபாவத்தைச்செய்து, அதனாற் சேதனர்களுக்குக் கலப்பற்ற சுத்த ஸ்வரூப சாமர்த்தியம் உண்டாகும்படி தீக்ஷையால் உபகரித்தல்.

ஐந்தொழில்களுள், அனுக்கிரகம் ஒன்றே மோக்ஷத்துக்குக் காரணம்; ஏனைய நான்கும் அனுக்கிரக நிமித்தமாகிய மலபாகத்துக்குங் கருமநாசத்துக்குங் காரணமாகிய போகத்துக்குக் காரணம்.

அவற்றுள்ளுஞ் சங்காரம், கருமபாகத்துக்கும் மாயா சாமர்த்திய உற்பத்திக்கும் உயிர்களின் இளைப்பாறுதற்கும், சிருட்டி, போகசாதன சம்பத்திக்கும்; திதி, பக்குவ கருமபோகத்துக்குங் கருமார்ச்சனத்

1. நியோகம் - முயற்சி.

துக்கும், திரோபாவம், போகத்தில் அமிழ்ந்தற்குங் கருமநாசத்துக்கும் மலபாகத்துக்கும் காரணமாம்.

கருமார்ச்சனம் - கருமங்களை ஈட்டுதல்.

அநாதி முத்த பரசிவன் பிரதம மகாசிருட்டி காலத்திலே, சுத்தமாயையிலிருந்து பொருட் பிரபஞ்ச முஞ் சொற்பிரபஞ்சமுமாயிருக்கின்ற சுத்த தத்துவம் ஐந்தையும், சுத்த புவனங்களையும், சுத்த போக்கியப் பொருள்களையும், சுத்த சுத்தாசுத்த அசுத்தாத்துவ வாசிகள் எல்லாருக்குந் தனித்தனி வேண்டப்படுகின்ற நாதரூப பரதேகங்களையும், சுத்தாத்துவாவிற்கு உரிய சூக்கும ஸ்தூல தேகங்களையும், சுத்தாத்துவ வாசிக ளாகிய அணுசதாசிவர் வித்தியேசர் மந்திரர் முதலிய தேகிகளையும், வேதாகமங்களையும் படைத்து, நியத கால[1] பரியந்தங் காத்து, அவாந்தரத்திற்[2] சிலவற்றை யும், பிரதம மகாசங்கார காலத்தின் முழுதையுஞ் சங் கரிப்பன்.

வித்தியேசருள்ளே தலைவனாகிய அனந்தேசு வரன் மகாசிருட்டிகாலத்திலே, அசுத்தமாயையி லிருந்து புவனக்கொத்துஞ் சூக்கும தேகக்கொத்தும் என்னும் இருவிதமாயிருக்கின்ற காலாதி பிருதிவி யந்தமான முப்பது தத்துவங்களையும், சுத்த அசுத்தாத் துவ வாசிகளாகிய சிறீகண்டன் முதலிய தேகிகளை யும் படைத்து, நியதகால பரியந்தங்காத்து, அவாந்

1. நியத காலம் - வரையறை செய்யப்பட்ட காலம்.
2. அவாந்தரம் - இடையிட்டது.

தாத்திற் சிலவற்றையும், மகாசங்கார காலத்தின் முற்றையும், சிறீகண்டாதித் துவாரத்தாலுந்[1] தானுகவுஞ் சங்கரிப்பன்.

குண நிலயச் சிறீகண்டருத்திரன் மத்திய சிருட்டி காலத்திலே, பிரகிருதியிலிருந்து புவனுதாரக் கொத்துமாத்திரமா யிருக்கின்ற குணுதி பிருதிவியந்தமான[2] இருபத்துநான்கு தத்துவங்களையும், போக்கியப் பொருள்களையும், தூல தேகங்களையும், அசுத்தாத்துவ வாசிகளாகிய பிரமா விட்டுணு முதலிய தேகிகளையும் படைத்து, நியதகால பரியந்தங் காத்து, மத்தியசங்கார காலத்தின் முற்றையுஞ் சங்கரிப்பன்.

குணநிலயப் பிரம விட்டுணுக்களும், பிரமாண்ட நிலயப் பிரம விட்டுணுக்களும் அதமசிருட்டி காலத்திலே, குணுதி பிருதிவியந்த புவனங்களிற் போக்கியப் பொருள்களையும், தூல தேகங்களையும், தேவர் முதலிய தேகிகளையும் படைத்துக் காப்பர்.

அவருள்ளும் பிரமனுனவன், பிரசேசர், சோமர், தேவர், கந்தருவர், இயக்ஷர், ரக்ஷர், பிசாசர், மனுடர், தாவரம், சரீசிருபம், பசு, பக்ஷி, மிருகம் என்பவற்றையும், நக்ஷத்திரம், கிரகம், தூமகேது, மேகம், மலை, கடல், யாறு முதலியவற்றையும் படைத்தான்.

---

1. துவாரம் - வாயில்.

2. குணதத்துவமுதல் பிருதிவிதத்துவ மிறுதியாகவுள்ள.

சோமர்-பிதிர்கள். சரீசிருபம் - ஊர்வன.

பிரமனும், விராட்டும், பிரசேசரும், பிறரும் நித்தியசிருட்டி காலத்திலே பிரமாண்டத்துப் படைக்கின்றனர்; விட்டுணு முதலாயினோர் காக்கின்றனர்.

சிறீகண்டரால் ஏவப்படுகின்ற காலாக்கினி ருத்திரன் அதமசங்கார காலத்திலும், நித்திய சங்கார காலத்திலும் தானுகவும் இயமன் முதலியவரா லுஞ் சங்கரிப்பன்.

இங்ஙனம் பிரதம மகாசிருட்டி, மகாசிருட்டி, மத்தியசிருட்டி, அதமசிருட்டி, நித்தியசிருட்டி என ஐவகைச் சிருட்டியும் அப்படியே ஐவகைச் சங்காரமும் உள.

திதிகாலத்திலே திரோபாவமும் சங்காரகாலத்திலே அனுக்கிரகமும் நடக்கும்.[1]

இனிக் கால பரிமாணங் கூறப்படுகின்றது.

மனுடருடைய வருஷந் தேவருக்கு ஒரு தினமாம்: அதில் உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இரவுமாம். முந்நூற்றறுபது தேவதினங் கூடினுல் ஒரு தேவவருடம். பன்னிரண்டாயிரந் தேவவருடங் கூடினுல், ஒரு தேவயுகம்: அதுவே சதுர்யுகமாம். எழுபத்தொரு தேவயுகங் கூடினுல், ஒரு மன்

1. இதனைச் சிவஞான சித்தியார் க. ௬எ, க. ௰௪, திருவிருத்தங்களுக்குச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த உரையால் தெளிக.

னுவந்தரம். இந்திராயுக்காலமும் அவ்வளவினதே யாம். ஆயிரந் தேவயுகந் திரும்பினாற், பிரமனுக்கு ஒரு பகலாம். ஒரு பிரமப் பகலிலே பதினாலு மன்னு வந்தரம் உள: ஆறு தேவயுகஞ் சேடமாம். பின்னும் ஆயிரந் தேவயுகந் திரும்பினாற், பிரமனுக்கு ஒரு இராத்திரியாம். ஆகவே இரண்டாயிரந் தேவயுகம் ஒரு பிரமதினமாம். முந்நூற்றறுபது பிரமதினம் ஒரு பிரம வருடமாம். நூறு பிரமவருடம் பிரமாயுக் காலமாம். பிரமாயுக்காலம் இரண்டு கூடினால் விட் டுணு தினமாம். விட்டுணு தினம் முந்நூற்றறுபது கூடினால் விட்டுணு வருடமாம். விட்டுணு வருடம் நூறு கூடின், விட்டுணுவாயுக்காலம். விட்டுணுவாயுக் காலம் இரண்டு கூடின், உருத்திர தினமாம். உருத் திர தினம் முந்நூற்றறுபது கூடின் உருத்திர வருட மாம். உருத்திரவருடம் பரார்த்தங் கூடின் உருத்தி ராயுக்காலமாம். உருத்திராயுக்காலம் இரண்டுகூடின் ஈசுவர தினமாம். ஈசுவர தினம் முந்நூற்றறுபது கூடின், ஈசுவர வருடமாம். ஈசுவர வருடம் பரார்த் தங் கூடின், ஈசுவராயுக்காலமாம். ஈசுவராயுக்காலம் இரண்டுகூடிற் சதாசிவ தினமாம், சதாசிவ தினம் முந்நூற்றறுபது கூடிற் சதாசிவ வருடமாம்.

பிரமப்பகலிலே நித்தியசங்காரமும், பிரமப்பக லின் முடிவிலே திரிலோக விஷயமாகிய அதம சங்கார மும், பிரமாயு முடிவிலே குணதி பிருதிவியந்த விஷய

---

1. இந்திராயு - இந்திரனது வாழ்நாள்.

மாகிய மத்திய சங்காரமும், உருத்திராயு முடிவிலே மாயாவிஷயமாகிய பிரதம மகாசங்காரமும் நிகழும்.

பசு கருமம்

பசுக்கள் சரீரமெடுத்துக்கொண்டு அநாதி கருமத்தின்வழியே போகம் புசிக்கும்போது செய்யுங் கருமங்கள், புண்ணியம் பாவம் [1] என இருவிதமாம்.

புண்ணியமாவது, விதிக்கப்பட்ட வினைவடிவமாய்ச், சுகசாதனமாய் இருப்பது.

பாவமாவது, விலக்கப்பட்ட வினை வடிவமாய்த், துக்க சாதனமாய் இருப்பது.

அல்லதூஉம் உயிர்க்கு இதஞ்செய்தலே புண்ணியம்; உயிர்க்கு அகிதஞ் செய்தலே பாவம்.

புண்ணியம் - சரியானது, நலமானது, அழகியது.
பாவம்-தீயது, கேடானது.

புண்ணியங்களாவன :—பத்தி, கருணை, மைத்திரி, முதிதை, உபேக்ஷை, நீதி, பொறை, அடக்கம், ஆதரம், இலச்சை, சிரத்தை, கொல்லாமை, மெய்ம்மை, கள்ளாமை, காமியாமை முதலியனவும், சௌசம், சந்தியாவந்தனம், பூசை, செபம், தவம், தானம், ஓதல் முதலியனவுமாம்.

---

1. 'வேதாகம நூல்வழி நில்லாமை பாவம், நூல்வழி நின்று அருள்வழி நில்லாமை புண்ணியம்' என்பது சிவஞான சித்தியார் உ.கக சிவஞானசுவாமிகள் உரை.

பத்தி—ஈசுவரனிடத்தும் உயர்ந்தோரிடத்தும் பற்றுதலாம்.

கருணை—உயிர்களுடைய துக்கத்தை மாற்ற விரும்பல்.

மைத்திரி—புண்ணியஞ் செய்வோரிடத்துச்சிநேகம்.

முதிதை—சுகிகளிடத்து உவகை.

உபேக்ஷை—ப்ாவிகளிடத்தில் வெறுப்பு.

நீதி—பலருஞ் சுகமடைய நடத்தும் முறை.

பொறை—பிறர்செய்த தீமையை மாறுசெய்யாது சகித்தல்.

அடக்கம்—குலம், கல்வி, செல்வம்முதலியவற்றால் உயர்வுபெற்றிருந்தாலுஞ் செருக்கற்றுத் தன்னைக் கீழ்ப்படுத்தல்.

ஆதரம்—உபசரித்தல்.

இலச்சை—தகாதகாரிய முயற்சியிலே மனத்தைச்சுருக்கல்; பழிக்கப்பட்ட செய்கையின் விலகுதல்.

சிரத்தை—ஆராயப்பட்ட பொருளிலே இஃது இப்படியேயன்றிப் பிறிதுபடியன்று என நிகழும் நிச்சயபுத்தி.

கொல்லாமை—உயிரை உடம்பின் நீக்காமை.

மெய்ம்மை—உள்ளபடி கூறல்.

கள்ளாமை—பிறர்பொருளை அனுமதியின்றி மறைவாகக் கவராமை

காமியாமை—விலக்கப்பட்ட பெண்களைப் புணர விரும்பாமை.

சௌசம்—மண் சலம் முதலியவற்றாற் சுத்தி செய்தல்.

சந்தியாவந்தனம்—நன்கு தியானிக்கப்படுங் கடவுளை நியத காலத்திலே வழிபடல்.

பூசை—ஈசுவரனை விம்பத்திலே பாவித்து, உபசரித்து, உபாசித்தல்.

சேபம்—வாச்சியப்பொருளாகிய ஈசுவரனை எதிர்முகமாக்குதற்பொருட்டு வாசகமாகிய மந்திரத்தை உச்சரித்தல்.

தவம்—மனம் இந்திரியவிடயத்திற் போகாமல் ஈசுவரவிடயத்திலே நிற்றற்பொருட்டு, உணவைக் குறைத்து உடம்பை ஒறுத்தல்.

தானம்—நீதிவழியாற்பெற்றபொருளைப் பிரத்தியுபகாரங்[1] குறியாது சற்பாத்திரருக்கு அன்போடு கொடுத்தல்.

ஓதல்—நல்லறிவு உதித்தற்பொருட்டு மெய்ந்நூல்களைப் படித்தல்.

பாவங்களாவன—ஈசுவரதூஷணம், சிவவிரோதம், துரோகம், காமம், உலோபம், கார்ப்பணியம், மற்சரம், வஞ்சனம், மதம், அநாதரம், கோபம், அசூயை, பொய், குறளை, கடுஞ்சொல், கொலை, களவு,

1. பிரத்தியுபகாரம் - கைம்மாறு.

வியபிசாரம், நன்றிமறத்தல், புலாலுண்ணல், கள்ளருந்தல், அசௌசம், நித்தியகருமலோபம் முதலியனவாம்.

ஈசுவரதூஷணம்—கடவுளை நிந்தித்தலும், கடவுளுக்குப் பிழைசெய்தலும், கடவுளிற் பற்றின்மையும், கடவுளாணையைக் கடத்தலுமாம்.

சீவ விரோதம்—சீவர்களிற் பகைசெய்தல்.

துரோகம்—கெடுக்க விரும்பல்.

காமம்—தகாத காரியத்தில் விரும்பல்.

உலோபம்—அந்நியாயமாகப் பிறர் பொருளில் விரும்பல்.

கார்ப்பணியம்—உசிதகாரியத்திற் செலவிடாது பொருளைக்காக்க விரும்பல்.

மற்சரம்—பிறருடைய நன்மையைத் தடுக்க விரும்பல்.

வஞ்சனம்—உள்ளதை மறைத்து இல்லதைக் காட்டல்.

மதம்—செருக்கு; தன்னிலே இல்லாத குணங்களை ஏற்றித் தன்னுயர்ச்சி கருதல்.

அநாதரம்—அவமதித்தல்; பற்றின்மை.

கோபம்—வேண்டப்பட்டது தடைப்பட்ட விடத்துத் தோன்றுகின்ற மனக்குழப்பம்; வந்த தடையிலே முரணுதல்.

அசூயை—பிறருடைய குணத்திற் குற்றமேற்றல்.

போய்—இல்லது கூறல்

குறளை—பைசுனம்; காணுதவழிப் பிறரை இகழ்ந்து கூறல்.

கடுஞ்சொல்—நிட்டுரவசனம்.

கொலை—உயிரை உடம்பின் நீக்கல்.

களவு—பிறரது பொருளை அனுமதியின்றி மறைவாகக் கவருதல்.

வியபிசாரம்—நியமந்தவறிப் புணருதல்.

நன்றிமறத்தல்—பிறர்செய்த நன்மையை மறத்தல்.

புலாலுண்ணல்—உயிரிற் பிரிந்த பிணத்தை யுண்டல்.

கள்ளருந்தல்—வெறிக் காரணமாகிய சாற்றை யுண்டல்.

அசௌசம்—சுத்திசெய்யாமை.

நித்தியகருமலோபம்—நியதகாரியமாகிய சந்தியா வந்தனம் முதலியவற்றை விடல்.

மெய்யறிவே சகல புண்ணியங்களுக்கும் மூலமாம். விபரீதவறிவு சகல பாவங்களுக்கும் மூலமாம். சிவபத்தியுஞ் சிவகருணையுமே பிரதான [1] புண்ணியங்களாம். சிவதூஷணமுஞ் சிவவிரோதமுமே பிரதான பாவங்களாம்.

இப்பசுகருமங்கள் பதிநியமத்தாற் போகத்துக்குச் சாதனமாமன்றிச் சுவதந்திரசாதனமாவன அல்ல.

1. பிரதானம் - முக்கியம்.

பசுபுண்ணியத்தாற் சுகபோகமன்றி முத்தி சித்தித்தல் இல்லை.

பசு போகம்.

பசுபோகமாவது, விடய விம்பிதமாகிப்[1] போக்கிய ரூபமாகிய புத்தியின் சாயையின் சம்பந்தத்தினுலே பசுவின் சிற்சத்தியில் ஆகின்ற உணர்ச்சி விளக்கமேயாம்.

அந்தப் போகமானது, சுகமுந் துக்கமுமென இருவிதமாம்.

பசுக்கள் சிருட்டிமுதலாக நிலைபெற்ற பரதேக சூக்கும தேகங்களை விடாது தரித்துநின்று, புண்ணிய பாவக் கலப்பினுலே மத்தியலோகத்திற் சென்று, பூதபரிணும உற்பூதமாகிய தூலதேகத்தைத் தரித்துச், சுகதுக்கங்களை அனுபவித்துப், புண்ணியபாவங்களைச் செய்து முடிவிலே தூலதேகத்தை விடுவர்.

பரிணுமம் - திரிபு. உற்பூதம் - தோன்றியது.

புண்ணியமிகுதியாலே சுவர்க்கலோகத்திலே சென்று, பூதசார உற்பூதமாகிய தூலதேகத்தைத் தரித்து, அதிக சுகத்தை அநுபவித்து, முடிவிலே தூலதேகத்தை விடுவர்.

பாவமிகுதியினுலே நரகலோகத்திற் சென்று, பூத உற்பூதமாகிய தூலதேகத்தைத்[2] தரித்து, அதிகதுக்கத்தை அநுபவித்துத், தூலதேகத்தை விடுவர்.

---

1. விம்பிதம் - பதிதல்.
2. இது யாதனு சரீரமென்று சொல்லப்படும்.

இப்படியே பசுக்கள் கருமநாசமும் மலபாகமும் வருமளவும், அந்த அந்த உலகங்களிலே அந்த அந்த யோனிகளிலே மாறி மாறிப் பிறந்திறந்து போகம் புசிப்பர்.

யோனி - காரணம், ஆகிருதி.

முத்தி சாதனம்.

முத்திசாதனமாவது, முத்தியை முடிக்குங் கருவியாம். தீக்ஷையும், அதற்கு அங்கமாகிய ஞானம், யோகம், கிரியை, சரியை என்பவைகளுமே முத்தி சாதனங்களாம்.

ஆன்மாவுக்குப் பாசத்தைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக்கிரியையே தீக்ஷை எனப்படும்.

தீ - கொடுப்பது. க்ஷை - கெடுப்பது.

ஆதிகுருவாகிய சிவனுடைய நியமப்படி குருசிடர்களாற் செய்யப்படுவனவாகிய சிற்சத்திக் கிரியையும், மனக்கிரியையும், வாக்குக்கிரியையும், சரீரக் கிரியையும், பிறவுந் தீக்ஷை வெளிப்படுதற்கு இடங்களாயிருத்தலால், உபசாரத்தினுலே தீக்ஷை என்று சொல்லப்படும்.

மலபரிபாக பேதத்தினுலே தீக்ஷை அநேக பேதமுடையதாயிருக்கும்.

ஞானமாவது, பதி பசு பாசங்களின் சுவரூபங்களை உள்ளபடியறிந்து, பாசநீக்கலின் வேட்கை[1] யுற்று அநாதிசுத்த அகண்ட பரிபூரண நித்திய வியாபக சச்சிதானந்த ரூபனாய் நின்ற நிட்களாதீத பரசிவனிடத்திலே, அறிவுத் தொழின் மாத்திரத்தாலே செய்யுஞ் சேவை.[2]

யோகமாவது, சிவனுடைய நிட்கள அரூபசரீரத்தைக்குறித்து, ஞானங்கமாகிய அகத்தொழிலினாலே செய்யுஞ் சேவை.

கிரியையாவது சிவனுடைய சகள நிட்கள ரூபாரூப சரீரத்தைக் குறித்து, ஞானங்கமாகிய அகத்தொழில் புறத்தொழில் என்னுமிரண்டினாலுஞ் செய்யுஞ் சேவை.

சரியையாவது, சிவனுடைய சகள ரூப சரீரத்தைக் குறித்து ஞானங்கமாகிய புறத்தொழிலாற் செய்யுஞ் சேவை.

சிவனுக்கு மூவித சரீரமுந் தியான பூசாதியின் பொருட்டுக் கற்பிதமாம்.

அறிவுத் தொழிலாவன, சிற்சத்தி வியாபார ரூபமாகிய நிராகார சிவபாவனை முதலியன.

---

1. பாச நீக்கத்தில் விருப்பம்.

2. ஞானமுதலிய நான்கும் சிவஞானசித்தியார் அ.கக - உஉ திருவிருத்தங்களுக்குச் சிவஞான சுவாமிகள் அருளியவாறுபற்றிக் கூறப்பட்டன.

அகத்தொழில்,—மனோ வியாபார ரூபமான சாகார சிவத்தியானம் உட்பூசை முதலியன.

புறத்தொழில்,—சரீரவியாபார ரூபமான சரீர சுத்தி, சிவசின்னதாரணம், சந்தியாவந்தனம், இலிங்க பூசை, தோத்திரம், செபம் முதலியன.

சேவையாவது, ஆன்மாக்கள் சிவனுடைய பெரு யர்ச்சியையும், தம்முடைய பெருந்தாழ்வையும், தம்மை உயர்த்துதற்பொருட்டுச் சிவன்கொண்ட பெருங்கருணையையும் உணர்ந்து, தம்மைத் தாழ்த்து கின்ற பாசங்களை அகன்று சிவத்துவத்தை அணுக வேண்டிச், சிவவாக்கியச் சிரத்தையும் பத்தியுங் கொண்டு சிவனிடத்திற் சார்தல்.

யோகமுங் கிரியையுஞ் சரியையும் ஞானத்துக்கு ஞாபகாங்கமாம். ஞானமும் தீக்ஷைக்கு அங்கமாம். தீக்ஷையே பிரதான முத்திசாதனம்.[1]

மலபாகக் குறையினாலே தீக்ஷையிற் குறையுடை யாருக்கே யோகம் முதலியன முறைமுறையே சாதனங் களாம்.

தீக்ஷையும், ஞானமும், யோகமும், கிரியையும், சரியையும் பதிபுண்ணியங்கள் எனப்படும்.

கருமநாசமும் மலபாகமும் உண்டாகியபோது சத்திநிபாதமும், மலசத்தி நிவிர்த்தியும், சம்ஸார

---

1. ஞானமொன்றே வீடுபேற்றிற்குச் சிறந்த காரண மென்பதனைச் சிந்தியார் அ. உள-வது திருவிருத்தத்திற்குச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த வுரையால் அறிக.

வைராக்கியமும், சிவபத்தியும் முறையே உண்டாம். உண்டாகவே, சிவதரிசன வேட்கையுங் குருத்தேடுகையும் உண்டாம். அவ்விதப்பட்ட அதிதீவிர பக்குவனுக்குச் சிவனே குருவாகிவந்து தீக்ஷைசெய்து ஞானமுபதேசித்து முத்திகொடுப்பன். அவ்விதப்பட்ட தீவிரபக்குவர் மந்தபக்குவர் முதலியவர்களுக்கு ஏற்ற ஒரு குருமூர்த்தியை அதிட்டித்துநின்று சிவனே தீக்ஷைசெய்வன். தீக்ஷைக்குறையினாலே தீக்ஷையின் பின்பு சிவசாத்திரங்களைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்பவற்றால் அபரஞானம்பெற்று, யோகம் கிரியை சரியை என்பவைகளை ஏற்றபடி அனுட்டித்து ஏற்றபடி பதமுத்திகளையும் பரமுத்தியையும் அடைவர்.

சீடனிடத்திலே சிரத்தை, பத்தி, விநயம் முதலிய குணங்கள் இல்வழியும், குருவினிடத்திலே ஞானம், கருணை, ஆசாரம் முதலிய குணங்கள் இல்வழியும், அவரிடத்துச் சிவாதிட்டானமும், சிவானுக்கிரகமும் உண்டாதல் இல்லை.

முத்தி

முத்தியாவது, பாச சம்பந்த துக்கத்தின் நீங்கிப் பரமசுகம் அடைந்திருத்தல்.

அந்தமுத்தியும் சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியம் என நான்கு விதமாம்.

கடவுளோடு சமானலோகமுடைமையே சாலோக்கியம்.

சமீபித்திருத்தலே சாமீப்பியம்.

சமானரூபமுடைமையே சாரூப்பியம்.

கடவுளோடு ஒத்திருத்தலே சாயுச்சியம்.

இந்நான்குந் தனித்தனியே அநேகவிதமாயிருக்கும்.

சகல பாசங்களின் நீங்கி, முழுதுந் தன் சுவரூபம் அடைந்து, நிரதிசய ஆனந்தமுற்று இருத்தலே பர சாயுச்சியம் என்னும் பரமுத்தியாம். ஏனையன அபரமுத்திகளாம்.

பரிபாகத்துக்கேற்ற தீக்ஷையோடு கூடிய சரியையாற் சாலோக்கியமும், கிரியையாற் சாமீப்பியமும், யோகத்தாற் சாரூப்பியமும் ஞானத்தாற் சாயுச்சியமும் பெறப்படும்.

சைவதீக்ஷைக்கு யோக்கியரல்லாத அதி மந்ததர பக்குவர்கள்,சிவனால் அதிட்டிக்கப்பட்ட அந்த அந்தக் கருத்தாக்களாற் செய்யப்பட்ட பசுசாத்திரங்களிற் கூறப்பட்ட அன்னிய சமயங்களிலே நின்று வழுவா தொழுகலினாலே தத்தமக்கு ஏற்ற பதமுத்திகளை அடைந்து, காலாந்தரத்திற் பரிபாக வசத்தாற் சைவத்திற் பிரவேசித்தே முத்தி அடைவர்.

சைவப்பிரகாசனம்

முற்றிற்று.

'சிவகாமி விலாச' அச்சுக்கூடம், சென்னை.